மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்

Mutram monthly June 2014

விலை : ரூ.10/- இல்லம் : 2 சுற்றம் : 8 ஆசிரியர் : விசவனூர் வே. தளபதி



## நீதி அழிந்த அந்த நிமிடங்கள்

## அனைவருக்கும் கல்வி வேண்டும்


மெகா ஸ்டார் ரிதம்ஸ்
சினி லைட் மியூசிக் ஆர்க்கெஸ்ட்ரா
K.R.Rakesh Raj
9841543439
Megha Star Rhythm's
Cine Light Music Orchestra
CHENNAI-600092

மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்

Mutram monthly June 2014

ஆசிரியர்
**விசவனூர் வே.தளபதி.**
இணை ஆசிரியர்
**அ.வெற்றிவேந்தன்** எம்.ஏ., பி.எல்.,
உதவி ஆசிரியர்கள்
**இமயவரம்பன்** பி.எஸ்சி.,எம்.ஏ.,பி.எல்.,
**அ. உமாமகேசுவரி** எம்.ஏ.,
**பி.எம்.பாலா**
**ஜெ. ராஜா சிங்,**
**ஜெய்**
**டேவிட் கிறிஸ்டோபர் ஆனந்த்**
தலைமைச் செய்தியாளர்கள்
**வே. வளையாபதி**
**த. ஞானமணி** பி.எஸ்.சி., பி. எட்.,
செய்தியாளர்கள்
**பொன்முடி** சிவகங்கை
**வெ. இராஜ்குமார்** எம்.ஏ., எம்ஃபில்.,
**சு.ஏழுமலை** எம்.ஏ., எம்ஃபில்.,
**ச. உதயகுமார்**
**க. பவானி** பி.ஏ.,
**சிவக்குமார்** மதுரை
**ரஞ்சித் இமானுவேல்**
**பெ. அர்ஜுன்**
**சாதிக்பாட்சா** கோவை
**மு.கலைச்செல்வன்**
**லோகநாதன்**
**ஷாம் எர்னஸ்ட்**
**எஸ். கண்ணபெருமாள்**
**கே.ஆர். ராகேஷ்ராஜ்**

வடிவமைப்பு
**எழில் வரைகலை**
புகைப்படக்காரர்
**இரமேஷ்**

அலுவலக முகவரி
13/5 புத்தா தெரு, கோடம்பாக்கம் ,
சென்னை 600 024
அலைபேசி : 8056281973, 9444363917.
மின்னஞ்சல்:
mutram2010@gmail.com
இணைய தளம் :
www.mutram.in

## உள்ளே

அனைவருக்கும் கல்வி வேண்டும்
*தலையங்கம்*.................................................... 4

நீதி அழிந்த அந்த நிமிடம்
*ஈழப்பதிவு*.................................................... 6

இலக்கணங்களின் வழி நிற்கும்
ஒப்பற்றத் தமிழ்மொழி
*இயற்றமிழன்*.................................................... 10

கல்யாணக் கண்டாங்கி (சிறுகதை)
*இருங்கோவேள்*.................................................... 12

நோட்டா
யாருக்கும் வாக்கில்லை
*பொறி. பொன் ஏழுமலை*.................................................... 16

நெல்லுப்பட்டறை (சிறுகதை)
*இருங்கோவேள்*.................................................... 19

புரட்சிக் கவி (கவிதை)
*பாவேந்தர் பாரதிதாசன்*.................................................... 21

உண்மையைத் தேடி
*இராஜாசிங்*.................................................... 23

ஆப்கானிஸ்தான் தீவிரவாதிகளால்
கடத்தப்பட்ட தமிழ் பாதிரியார்.................................................... 27

கள்வன்மகன்
*புலவர் கு. ஏழுமலை*.................................................... 28

குடியரசுத் தலைவர் உரையிலிருந்து.................................................... 33

காசோலை, வரைவோலை
அனுப்புவோர் "mutram" என்ற கணக்கிற்கு
எடுத்தனுப்பலாம்.



# அனைவருக்கும் கல்வி வேண்டும்

கல்வி என்ற வார்த்தையை கேட்கும்போதும் உச்சரிக்கும்போதும், இந்தக் கல்வி என்பது அனைவருக்கும் உரித்தானது. அதை அனை வரும் பெற வேண்டும் என்ற சிந்தனைதான் எல்லோருக்கும் தோன்றும்.

ஒரு காலத்தில் கல்வி எங்களுக்கே உரியது என்று ஒரு சாரார், கல்வி பிறருக்குச் சென்று சேர்ந்து விடாமல் முட்டுக் கட்டை போட்டு மூடி மறைத்துக் கொண்டு சர்வாதிகாரம் பண்ணிய துண்டு. ஆனால் கல்வியோ நான் உனக்கு மட்டும் சொந்தமல்ல என்று சொல்லி எல்லோருக்கும் சொந்தமானது. தற்காலத்தில் கல்வி வியா பாரப் பொருளாகி விட்டது என்பது எல்லோருக்கும் தெரிந்த ஒன்றுதான்.

அரசால் நடத்தப்படும் கல்வி நிறுவனங்கள் குறைந்து போய் விட்டன. கல்வி என்பது சேவை சார்ந்தது என்பதை அரசும், தனி யார்களும் மறந்துவிட்ட சூழ் நிலையில் கல்வி வியாபாரமாகிப் போய் விட்டது.

தற்காலத்தில் கற்பிக்கப்படும் கல்வி என்பது, பெரும்பாலும் முக்கியமாக பள்ளிக்கல்வி மொத்தமும் ஞாபகசக்தியை முன்னிலைப் படுத்துவதாகவே உள்ளது. பாடங்களை முழு வதும் நினைவில் நிறுத்தி அதை அப்படியே தேர் வுத்தாளில் கக்கி வைத்தால் அதற்கு பெரும்புகழ் கிடைத்துவிடுகிறது. இந்த முறை சரியல்ல என்று கல்வியாளர்களும், படித்தறிந்த மேதைகளும் சொல்கிறார்கள் என்றாலும், இம்முறையை தவிர்த்து சரியான கல்வி முறையை நமது நாட்டில் புகுத்த யாரும் முன்வரவில்லை. அரசும் அதற்கான முயற்சிகளில் ஈடுபடுவதாகவும் தெரிய வில்லை.

பொறியியல் என்ற பெரும் மோகத்தில், முக்கியமாக கணினி அறிவியல் என்ற மோகத் தில் சுற்றியலைந்த படிப்பாளிகள் எல்லாம்



இப்போது அதை விட்டுவிட்டதாவே தெரிகிறது. பல பொறியியல் கல்லூரிகள் மூடப்படும் நிலைக்கு வந்துவிட்டதாகவும் கூறுகிறார்கள். கடந்த ஓரிரண்டு ஆண்டுகளாகவே பொறியியல் கல்லூரிகளில் பல ஆயிரம் இடங்கள் காலியாகக் கிடக்கின்றன என்ற தகவல் இருந்து கொண்டு தான் இருக்கிறது. இந்த ஆண்டு அந்த எண்ணிக்கை மேலும் அதிகமாகும் என்ற பேச்சு இருக்கிறது. கலை அறிவியல் தொடர்பான பாடங்களைப் படிப்பதற்கு மாணவர்கள் முன்னுரிமை கொடுக்கிறார்கள் என்பது பரவலாகப் பேசப்படுகிறது.

அது மெய்ப்படும் விதமாக கலை அறிவியல் கல்லூரிகள் நிரம்பி வழிகின்றன. 40 இடங்கள் இருந்தால் நான்காயிரம் விண்ணப்பங்கள் வந்து சேருகின்றன என்று கூறுகிறார்கள். இந்த ஆர்வம் எத்தனை ஆண்டுகளுக்கோ தெரியவில்லை. சாய்ந்தால் ஒரே பக்கம் சாய்வது என்பது சாதாரண நிகழ்வாகவே இன்றளவும் இருந்து வருகிறது.

அரசு கல்வி நிறுவனங்கள் எத்தனையோ இருந்தும், அவை எப்போதும் இரண்டாம் தரம்தான் என்ற நினைவு மக்களிடையே பல காலமாக நிலவி வருகிறது. முதலில் தனியார் கல்வி நிறுவனங்களில் முயற்சிப்பது. அங்கு கிடைக்காவிட்டால் அரசு கல்வி நிறுவனங்களுக்கு வருவது என்பது தான் மக்களின் நடைமுறையாகிப்போனது. தனியார் கல்வி நிறுவனங்கள் முதலில் பணம் எங்கிருந்து கிடைக்கும். எந்த மாணவருக்குக் கொடுத்தால் அவர் மூலம் அதிக நன்கொடை பெற முடியும் என்ற கணக்கைத்தான் முதலில் தொடங்குகின்றன.

சிறுபான்மையினருக்காக நடத்தப்படும் கல்வி நிறுவனங்கள் கூட அதைத்தான் பார்க்கின்றன. அவர்கள் எதைச்சொல்லி கல்வி நிறுவனம் நடத்த அனுமதி வாங்கினார்களோ அதை விடுத்து, பணத்திற்கு முதலிடம் கொடுத்து அதன் பின்னால் தங்களது கொள்கைக்கு சில இடங்களை நிரப்பும் சந்தர்ப்பவாதத்தைத்தான் கொண்டுள்ளன.

பணம் இல்லாதவர்கள், பரிந்துரைக்கு ஆள் கிடைக்காதவர்கள், பேசத்தெரியாதவர்கள் இவர்களெல்லாம் கல்லூரியில் சேருவதற்குச் சென்றால் பல காரணங்களைச் சொல்லி விரட்டியடிக்கப்படுகிறார்கள்.

கல்லூரிக்கு அருகில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை என்பதெல்லாம் இருந்தும் கூட, அதெல்லாம் கண்டு கொள்ளப்படுவதில்லை. முதல் தலைமுறை பட்டதாரிகள் என்பதும் பல இடங்களில் கணக்கில் கொள்ளப்படுவதில்லை. பல்வேறு ஒதுக்கீடுகள் அரசால் சட்டமாக்கப்பட்டிருந்தாலும் அவை நிர்வாகத்தினருக்கு சாதகமாக இல்லாவிட்டால், கணக்கில் எடுத்துக் கொள்ளப் படுவதே இல்லை.

சிறுபான்மைக் கல்லூரிகளில் சிறுபான்மையினருக்கு முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும் என்ற நிலை இருந்தாலும். அதில் சாதி ஒதுக்கீடுகள் வேண்டும் என்று வாதிடுகிறவர்களும் இருக்கிறார்கள். இது நியாயமல்ல என்று தெரிந்திருந்தும் சில கல்லூரிகள் தங்களுக்குப் பிடிக்காதவர்களுக்கு இடம் தரக்கூடாது என்ற எண்ணத்தில் சாதிகளைக் கருத்தில் கொண்டு, காய் நகர்த்தி விளையாடிக் கொண்டிருப்பதும் நடந்து கொண்டுதானிருக்கிறது.

மாணவர்கள் தங்களுக்குப் பிடித்த படிப்பைப் படிக்க, எவ்வித தடையும் இல்லாத ஒரு காலம் வருமானால் அந்தக்காலம்தான் கல்வியின் பொற்காலமாக இருக்கும். ஒரு மாணவன் விரும்பும் படிப்பைப் படிக்க இயலவில்லை என்ற நிலை என்பது, நாடாளுகின்ற அரசுக்கு அது அவமானச் சின்னம் என்ற நினைவு, ஆளுகின்ற அரசுகளுக்கு வரவேண்டும்.

அந்த அவமானத்தை துடைத்தெறிய அரசு முனைய வேண்டும். கல்விச்சாலைகளை நிறுவ வேண்டும். அரசின் சட்டங்களுக்கு உட்பட்டு நடத்தப்படுகிற தனியாருக்கு மட்டும் கல்விச் சேவை செய்ய வாய்ப்புத் தரவேண்டும். தவறுகிறவர்களை கல்விப்பணியிலிருந்து வெளியேற்ற வேண்டும்.

கல்வியை சேவை எண்ணத்துடன் செய்பவர்களுக்கு கல்விச் சாலைகள் நடத்த அனுமதி கொடுத்து, கல்வி எல்லோருக்கும் உரித்தானது என்ற நிலையை உருவாக்க வேண்டும். ◆

# நீதி அழிந்த அந்த நிமிடங்கள்

2009 ஆண்டு மே மாதம் 17 ஆம் நாள் இலங்கை அரசுக்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையே நடைபெற்ற உரையாடல்கள், சந்திர காந்தன், சந்திரநேரு ஆகியோர் மத்தியஸ்தம் வகித்த விபரம்.

மே மாதம் காலை 8:46க்கு இலங்கை அமைச்சர் பாலித கோகன்ன லண்டனில் உள்ள மேரி கொல்வின் ஊடாக எஸ் எம் எஸ் அனுப்புகிறார். வெள்ளைக் கொடியைப் பிடித்தபடி நடந்து வந்து சரணடைய வேண்டும் என்று.

மாலை 3:29 க்கு மீண்டும் ஒரு எஸ் எம் எஸ் மேரி கொல்வினுக்கு வருகிறது. அதனை அவர் நடேசன் அவர்களுக்கு பார்வேட் செய்கிறார். அதேவேளை பின் புலத்தில் பாரிய வெடிச் சத்தங்கள் கேட்பதாக மேரி கொல்வின் தெரிவிக்கிறார்.

மாலை 6:30 க்கு நடேசன் கொழும்பில் உள்ள சந்திரநேருவைத் தொடர்பு கொண்டு, தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள், உத்தரவு தந்துவிட்டார் என்றும், தாம் இனி சரணடையலாம் என்றும் கூறுகிறார். பசில் ராஜ பக்சேவைத் தொடர்பு கொண்டு இச்செய்தியைச் சொல்லுமாறு கூறுகிறார்.

மாலை 7 மணிக்கு சந்திர நேரு, பசில் ராசபக் சேவைத் தொடர்பு கொண்டு நடேசன், சுமார் 3000 போராளிகள் மற்றும் 22,000 காயப்பட்ட



பொதுமக்களோடு சரணடைய இருப்பதாகக் கூறுகிறார். புலிகளின் அரசியல்துறை மட்டும் இந்த வேளையில் சரணடைய நினைப்பதாகவும் தெரிவிக்கிறார்.

உடனே பசில், நான் இதனைத்தான் எதிர் பார்த்தேன். இது நல்ல செய்தி, ஆனால் மிகவும் காலதாமதமாக நடைபெறுகிறது. முன்னரே இவர்கள் சரணடைந்திருக்கலாம். எதற்கும் நான் எனது சகோதரர் மகிந்தரோடு பேசுகிறேன் என்று சொல்கிறார்.

இதனைத் தொடர்ந்து சந்திரநேரு, பிரித் தானியா, அமெரிக்கா, மற்றும் நோர்வே தூது வர்களைத் தொடர்பு கொண்டு நடேசன் சரண டைவு குறித்து விளக்கிச் சொல்கிறார்.

மாலை 7:30 மணிக்கு நடேசன் மீண்டும் நேருவுக்கு கால் பண்ணுகிறார். நான் பசிலுடன் பேசிவிட்டேன். அவர் ஒத்துக் கொண்டுள்ளார் என்று கூறுகிறார் நேரு. ஆனால் சரியாகப் பேச முடியவில்லை. காரணம் நடேசன் இருக்கும் பகுதியில் இருந்து பாரிய வெடிச்சத்தங்கள் கேட்டுக் கொண்டே இருக்கிறது.

7:30 மணிக்கு நேரு பசிலை தொடர்பு கொள்ளப் பார்க்கிறார். ஆனால் பசில் தொலைபேசி ஆப் செய்யப்பட்டுள்ளது. உடனே மகிந்தரின் அலுவலகத்திற்கு நேரு தொடர்பு கொள்ளப் பார்க்கிறார். ஆனால் முடியவில்லை. இந்த வேளை பசில் ராசபக்சேவிடம் இருந்து நேருவுக்கு அழைப்பு வருகிறது. ஓ கே, நாங்கள் ஏற்பாடுகளைச் செய்து கொண்டு இருக்கிறோம். நான் மகிந்தருடன் பேசிவிட்டேன். மகிந்தர் நடேசனின் சரணடைவை ஒப்புக் கொண்டு விட்டார் என்று சொல்கிறார் பசில்.

இதே வேளை லண்டனில் உள்ள மேரி கொல்வினுக்கு நடேசன் தொலைபேசி அழைப்பை விடுத்து, நாம் ஆயுதங்களைக் கீழே போடுகிறோம். ஒபாமா அரசாங்கம் மற்றும் பிரித்தானிய அரசாங்கம் எமது பாதுகாப்பை உறுதிப்படுத்துமா? என்று கேட்கிறார். எங்க ளால் இலங்கை அரசோடு பேசி, இனி ஒரு யுத்த நிறுத்தத்தை கொண்டுவர முடியாது. எனவே, ஐ நா அதிகாரி விஜய் நம்பியாரை, தொடர்பு கொண்டு, இலங்கை அரசோடு பேசச்சொல்ல முடியுமா? என்று நடேசன் கேட்கிறார்.

மே 17 இரவு அப்படியே செல்கிறது. அதிகாலை 1:30 மணி ஆகிறது. (அதாவது மே 18 அதிகாலை) 1:30 க்கு நடேசன் மீண்டும் நேருவுக்குப் போன் செய்கிறார். ஆமி மிக நெருக்கமாக வந்துவிட்டார்கள். துப்பாக்கிச் சத்தம் கேட்கிறது. ஆங்காங்கே பெண்கள் கதறும் சத்தமும் கேட்கிறது. 3,000 போராளிகள் காயப்பட்ட 22,000 பொதுமக்கள் இருக்கி றார்கள். ஏன் இலங்கை இராணுவம் தொடர்ந் தும் செல் அடிக்கிறார்கள். உண்மையில் அவர்கள் ஒரு யுத்த நிறுத்தம் அல்லது சரண டைவுக்கு ஒப்புக்கொண்டால், அவர்கள் ஏன் இவ்வாறு செய்ய வேண்டும்? நீங்கள் பேசினீர்களா என்று கேட்கிறார். ராணுவத்தின் செல்களால் மக்கள் காயமடைந்து சாகிறார்கள் என்றும் அவர் கோபமாகக் கூறுகிறார்.

நேரு சொல்கிறார், தயவுசெய்து என்னோடு கத்த வேண்டாம், நான் உங்கள் மேல் செல் அடிக்கவில்லையே... உடனே அந்த தொலை பேசியை வாங்கி, புலித்தேவன் பேசுகிறார்... நீங்கள் சொன்னீர்கள் செல் அடிப்பது நிறுத்தப்படும் என்று. ஆனால் அது நிறுத்தப்படவில்லை. எங்கள் சரணடைவை இராணுவம் ஏற்றுக் கொள்ளுமா என்ற சந்தேகம் உள்ளது என்று சொன்ன புலித்தேவன் மீண்டும் அழைக்கிறோம் என்று சொல்லி போனை கட் செய்கிறார்.

மே 18 அதிகாலை 1:45க்கு நடேசன் மீண்டும் நேருவோடு தொடர்புகொண்டு அரசாங்கத் தரப்பில் இருந்து ஏதாவது செய்தி வந்ததா என்று கேட்கிறார்.

அதேவேளை நான் அமெரிக்காவில் உள்ள வாசிங்டன் அதிகாரிகளோடு நேரடியாக தொடர்புகொண்டுள்ளேன் என்று நடேசன் கூறுகிறார்.

மே 18 அதிகாலை 1:56 க்கு பசில் ராசபக்சே நேருவுக்கு அழைத்து, நாம் அனைத்து ஏற்பாடு களையும் செய்கிறோம். சரணடைய வருபவர் களை எப்படி அடையாளம் காணுவது என்று கேட்கிறார். அவர்கள் வெள்ளைக் கொடியோடு வருவார்கள் என்று நேரு சொல்கிறார்.

ஓ கே. நான் மகிந்தவிடம் அவர்கள் வெள்ளைக்கொடியோடு வருவார்கள் என்று சொல்கிறேன் என்கிறார் பசில். இதே வேளை குறுக்கிட்ட நேரு, நடேசன் என்னை சரணடை

யும் இடத்திற்கு வரும்படி சொல்கிறார், என்று கூறுகிறார்.

ஓ கே, நான் அதனைப் பார்த்துக் கொள் கிறேன் என்கிறார் பசில். உரையாடல் முடிகிறது.

மே 18 அதிகாலை 3:30 மணிக்கு, புலித்தேவன் நோர்வேயில், உள்ள அதிகாரி ஒருவரைத் தொடர்பு கொள்கிறார். அதேவேளை அவர் கொழும்பில் உள்ள நோர்வே அதிகாரிகளைத் தொடர்பு கொண்டு தமது சரணடைவு தொடர் பாகக் கூறுகிறார். இதே வேளை நடேசன் லண்டனில் உள்ள தனது சகோதரரைத் தொடர்புகொண்டு, தன்னிடம் சுமார் 1,000 காயப் பட்ட போராளிகள் உள்ளதாகக் கூறுகிறார்.

மே 18 அதிகாலை 4:09 க்கு பாலித கோகன் னவுக்கு மேரி கொல்வின் அவர்கள் புலித்தேவன், நடேசன் மற்றும் 40 போராளிகள் சரணடைய உள்ளதாக எஸ் எம் எஸ் மூலமாக அறிவிக்கிறார்.

மே 18 அதிகாலை 4:36க்கு நடேசன் நேருவுக்கு கால் செய்கிறார். நேரு, தான் பசிலுடன் பேசிய விடயங்களைக் கூறுகிறார். வெள்ளைக்கொடி யோடு வரச்சொல்கிறார். நடேசன் நேருவிடம், நீங்களும் வருவீர்களா என்று கேட்கிறார்.

மே 18 அதிகாலை 5:00 மணிக்கு மீண்டும் நடேசன் அவசரமாக நேருவை அழைக்கிறார். எங்கள் மேல் இராணுவம் பாரிய தாக்குதலைத் தொடுத்துள்ளது. பலர் மேலும் காயப்பட்டு இருக்கிறார்கள் என்று பதட்டமாகக் கூறுகிறார்.

அதிகாலை 5:11 க்கு மீண்டும் நடேசன் நேருவுக்கு கால் செய்கிறார். அரசாங்கம் ஏதாவது சொன்னதா என்று கேட்கிறார். ஆனால் படு பயங்கரத் துப்பாக்கிச் சத்தங்கள் கேட்ட வண்ணம் உள்ளது என்று நேரு விவரித்துள்ளார்.

அதிகாலை 5:28 க்கு நேரு அமெரிக்கத் தூதுவரை தொடர்பு கொள்கிறார். தாம் கடுமையாக வேலை செய்து கொண்டு இருப்பதா கவும், இந்த சரணடைவு குறித்த, தாம் ஆழ்ந்த கருசணை கொண்டுள்ளதாகவும் அமெரிக்கா கூறுகிறது.

காலை 5:30 மணிக்கு நல்ல தூக்கத்தில் இருந்த விஜய் நம்பியாரை, போன் மேல் போன் அடித்து எழுப்புகிறார் மேரி கொல்வின். நான் மகிந்தருடன் பேசிவிட்டேன். சரணடையும் புலிகளை தான் ஒன்றும் செய்ய மாட்டேன் என்று மகிந்தர் என்னிடம் கூறியுள்ளார். எனவே நான் இலங்கை சென்று இந்த சரணடைவை நேரில் கண்காணிக்கத் தேவையில்லை என்று மேரி கொல்வினிடம் தெரிவிக்கிறார்.

உடனே மேரி கொல்வின், இது சரியான முடிவா? உங்களுக்கு இது சரி என்று தென்படுகிறதா என்று சந்தேகம் எழுப்புகிறார்.

காலை 5:51 மணிக்கு பிரித்தானியத் தூதுவர் அலுவலகத்தில் உள்ள இரண்டாம் நிலை அதிகாரி ஒருவர், நேருவைத் தொடர்பு கொண்டு, இந்தச் சரணடைவு தொடர்பாக பிரித்தானிய அரசு இலங்கை அரசுடன் பேசிவிட்டது என்றும், இதனை இலங்கை அரசு சரியாகச் செய்ய வேண்டும் என்று தமது அரசு அழுத்தம் கொடுத்துள்ளது என்றும் கூறுகிறார்.

5:45 க்கு மேரி கொல்வின் நேருவுக்கு, அழைப்பை விடுத்து பேசி, மீண்டும் தான் விஜய் நம்பியாரைத் தொடர்புகொள்கிறேன் என்று கூறுகிறார்.

5:56 க்கு முன்னர் மேரி கொல்வின் அனுப்பிய குறுந்தகவலுக்கு பதில் போடுகிறார் பாலித கோகன்ன "தாங்ஸ்" என்று.

6:02 க்கு நடேசன் மீண்டும் நேருவை அழைக்கிறார். பலர் இறந்துகொண்டு இருப்ப தாகக் கூறுகிறார். அரசாங்கம் ஏதாவது சொன் னதா என்றும் கேட்கிறார். ஆனால் இல்லை என்று சொன்ன நேரு, பசில் ராசபக்சே வின் மொபைல் தொலைபேசி இலக்கத்தைக் கொடுத்து, அவருக்கே நீங்கள் நேரடியாக அடித்துப் பேசுங்கள் என்று கூறுகிறார்.

காலை 6:09 க்கு புலித்தேவன், தான் பாலம் ஒன்றுக்கு அருகாமையில் வெள்ளைக்கொடி யுடன் செல்கிறேன் என்று மேரி கொல்வினுக்குச் சொல்கிறார். தனது சாட்டிலைட் தொலை பேசியை தான் துண்டிக்காமல் அப்படியே செல்கிறேன் என்று அவர் கூறுகிறார். ஆனால் சுமார் 2 நிமிடங்களுக்குப் பின்னர், அவர் தொலைபேசி இணைப்பு தானாகவே துண்டிக் கப்படுகிறது.

மே 18 காலை 6:10 க்கு மகிந்தரிடம் இருந்து நேருவுக்கு அழைப்பு வருகிறது. ஓ கே. இந்தச் சரணடைவை நாம் ஏற்றுக் கொள்கிறோம். நான் கோட்டபாயவுக்கு கட்டளையிட்டுவிட்டேன். சரணடையும் புலிகளை அவர் ஒன்றும் செய்ய மாட்டார் என்கிறார். நான் அந்தப் பகுதிக்கு செல்ல விரும்புகிறேன் என்று கூறுகிறார் நேரு. இல்லை இல்லை, அந்தப் பகுதிக்கு நீங்கள் போக வேண்டாம்.

எங்கள் இராணுவம் மிகவும் கட்டுப்பாடான இராணுவம். நாங்கள் ஒரு கட்டளை இட்டால் அவர்கள் அதனை மீற மாட்டார்கள் என்று கூறுகிறார் மகிந்தர். நீங்கள் ஏன் அந்த யுத்தப் பிரதேசத்திற்குச் சென்று உங்களைத் தேவையில்லாமல் ஆபத்தில் போடுகிறீர்கள் என்று கேட்கிறார் மகிந்தர். தொலைபேசி உரையாடல் முடிவடைகிறது.

மே 18 அதிகாலை 6:20 க்கு பசில் நேருவைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, தாம் நடேசனுடன் பேசிவிட்டதாகக் கூறுகிறார். இனி ஒன்றுக்கும் பயப்படத் தேவையில்லை என்கிறார். அவர்களின் சரணடைவை நாம் ஏற்றுக் கொண்டுள்ளோம் என்கிறார். எந்த வழியால அவர்கள் வரவேண்டும், எங்கே வரவேண்டும் என்ற விபரங்களை பசில், நேருவிடம் தெரிவிக்கிறார்.

மே 18 அதிகாலை 6:20 முதல் 6:30க்குள் நேரு, நடேசனுடன் தொடர்பு கொண்டு பசில் சொன்ன விடையங்களைச் சொல்கிறார். ஆனால் நடேசன் இருக்கும் பகுதியில் தொடர்ந்தும் துப்பாக்கியால் சுடும் சத்தம் கேட்கிறது. இதனால் நிலைகுலைந்து போகிறார். இதேவேளை தொலைபேசி அழைப்பும் துண்டிக்கப்படுகிறது.

காலை 6:46 க்கு, பாலித கோகன்னவுக்கு நடேசன், பாலம் ஒன்றுக்கு அருகாமையில் வெள்ளைக்கொடியோடு வருவதாக அறிவிக்கப்படுகிறது. இது நல்ல செய்தி, இனி நாம் பழையவற்றை மறந்து விட்டு நாட்டைக் கட்டியெழுப்பலாம் என்று அமைச்சர் பாலித கோகன்ன மேரி கொல்வினுக்கு எஸ் எம் எஸ் அனுப்புகிறார்.

6:56 க்கு பசில் ராசபக்சே நேருவுடன் தொடர்பு கொண்டு, நடேசனிடம் கேளுங்கள், ஏன் புலிகள் தொடர்ந்தும் ஆமியை நோக்கிச் சுடுகிறார்கள்? என்று கேட்டுள்ளார். இனி நீங்கள் வாயைப் பொத்துங்கள். இனி நீங்கள் இது தொடர்பாக சர்வதேசத்திற்கு எதனையும் சொல்லக்கூடாது என்று பசில் மிரட்டியுள்ளார். நடேசனின் சாட்டிலைட் போன் இலக்கத்தை நேரு பசிலுக்குக் கொடுத்து, நீங்கள் நடேசனுடன் நேரடியாகப் பேசுவது நல்லது என்று கூறியுள்ளார்.

மே 18 காலை 8:00 மணிக்கு ஜேன்ஸ்டன் பெர்னாண்டோ எம்.பி, நேருவுக்கு தொலைபேசியில் அழைத்து, நடேசன், புலித்தேவன் அனைவரும் இறந்துவிட்டார்கள் என்று கூறியுள்ளார். உங்களுக்கு எப்படித் தெரியும் என்று நேரு கேட்டவேளை, எனது நண்பர் ஒருவர் கமாண்டோ படைப்பிரிவில் உள்ளார். அவரே இப்போது எனக்குச் சொன்னார் என்று கூறியுள்ளார்.

அது மட்டுமல்ல. சரணடைந்தவர்களுக்கு முதலில் தேனீர் கொடுத்தள்ளார்கள். பின்னர் இரண்டாவதாக சரணடைந்த நடேசன் குழுவுக்கும் தேனீர் கொடுத்துள்ளார்கள். ஆனால் சரணடைவு முடிந்த பின்னர், அனைவரையும் கடுமையாகத் தாக்கியுள்ளார்கள். நடேசனின் மனைவி கமாண்டோ பிரிவின் தளபதி கால்களில் விழுந்து கதறி அழுதுள்ளார். ஆனால் அவர்கள் அனைவரையும் அப்படியே கொன்றுவிட்டார்கள் என்று, ஜேன்ஸ்டன் பெர்னாண்டோ எம்.பி, தனது நண்பர் (கமாண்டோவில் உள்ளவர்) கூறியதாகச் சொல்லியுள்ளார்.

இதனால் இலங்கையில் இருக்கப் பயந்து உடனடியாக நாட்டை விட்டு வெளியேறி லண்டனில் தஞ்சமடைந்தார் நேரு. இப்படித்தான் இலங்கை அரசாங்கமும், அரசப் படைகளும் சரணடைந்தவர்களைச் சித்திரவதை செய்து கொன்றார்கள்.

*(மே 18 அன்று மரணித்தவர்கள் நினைவாக, அதிர்வு இணையம் இதனை தமிழாக்கம் செய்து வெளியிட்டுள்ளது.)*

◆

# இலக்கணங்களின் வழி நின்றும் ஒப்பற்றத் தமிழ்மொழி 19

இயற்றமிழன்

**தத்வ  தத்துவ. உயிர் புகுதல்**

க்ருஷ்ண  கிருட்ண  கிருட்டின உயிர் புகுதல்

ச்க்தி  சக்தி மெய் திரிதல் (கசதப ஒழித்த ஈரே ழன் கூட்டம் மெய்ம்மயக் குடனிலை ரழஒழித் தீரெட்டு ஆகுமிவ் விருபால் மயக்கும் மொழியிடை மேவும், உயிர்மெய் மய்ககள வின்றே நன் எழுத் *110.*

**பக்தி  - பத்தி மெய்திரிதல்**

ஆங்கிலச் சொற்கள் தமிழில் புகும்போது இவ்வாறு மாறுதலடைந்து தமிழின் ஒலி முறையைப் பெறுகின்றன.

இங்க்லாந்  இங்கிலாந்து உயிர் புகல்

க்றைஸ்ட்  கிறிஸ்து  கிறித்து  திரிதல்

தெலுங்கு முதலியவற்றில் இவ்விதிகள் போற்றப்படவில்லை ஆதலின், இவை திராவிட மொழிச் சொற்கள் என்றும், இவை பிறமொழிச் சொற்கள் என்றும் ஒலியமைப்பை நோக்கிப் பிரித்துவிடலாம். தமிழில் புகும் பிறமொழிச் சொற்கள் திரிந்தே புகுவதால், தமிழ்ச் சொற்கள் போன்றே அமைந்துள்ளன. தமிழ் மொழியில் பழைய ஒலியமைப்பு முறை எவ்வாறு போற்றப்பட்டு வருகின்றதென்பது இதனால் அறியப்படும்.

ஆயினும், வடமொழியின் கலப்பால் நாளடைவில் மேற்கண்ட விதிகள் மெல்ல மெல்ல மாறத் தொடங்கியுள்ளன. இன்று பக்தி, யுக்தி, தத்வம் என்று பேசவும் எழுதவும் காண்கிறோம். நெடுங் காலத்திற்கு முன்னரே பவணந்தி முனிவர் மொழிமுதல் வரும் எழுத்துக் களைப் பற்றிய விதிகளை மாற்றத் தொடங் கினார். எடுத்துக்காட்டாக

சகரக் கிளவியும் அவற்றோ ரற்றே

அஐ ஔஎனும் மூன்றலங் கடையே *(தொல். எழுத்து. 62)*

எனத் தொல்காப்பியனார் கூறியிருக்க, இரண்டாயிரம் ஆண்டுகள் கழித்து வந்த பவணந்தியார் சகரம் எல்லா உயி ருடனும் மொழி முதலில் வரும் எனக் கொண்டு,



அவ்விதியை மாற்றத் தொடங்கினார்.

காரணம் என்னவெனில், தொல்காப்பியனார் காலத்தில் வழங்காத சங்கு சங்கம் சகடம் முதலான வடசொற்கள் நன்னூலார் காலத்தில் பயின்று வந்தமையே ஆகும். (இனி முதலா மெனற் பத்துயிர்மெய்யுள் வகர முதலிய நான்கினையும் விதந்து கூறவே, ஒழிந்த ஆறு மெய்யும் பன்னி ரண்டுயிரோடு முதலாமென்பது அருத்தாபத்தியாற் பெற்றாம்.

இனி, "சகரக் கிளவியும் அவற்றோ ரற்றே அஜ ஔ எனும் மூன்றலங்கடையே" என்பது முதலாக இன்னோ ரான்ன சில எழுத்துக்களை மொழிக்கு முதலாக என ஆசிரியர் தொல்காப்பியர் சிலக்கி னாராலோ எனின், இவ் வடமொழிகளும் திசைச் சொற் களும் அக்காலத்து இவ்வாறு தமிழின்கட் பயின்று வாராமை பற்றி என்க. நன்னூல், எழுத்து 106 விருத்தியுரை)

யகர மெய் இன்ன உயிரோடுகூடி மொழி முதலில் வரும் என விதிக்கும் தொல்காப்பியனார்.

ஆவோ டல்லது யகர முதலாது என விதித் திருக்க, நன்னூலாரோ, அஆ உஊ ஒஓஔ யம்முதல் என்றார். யவனர், யானை, யுகம், யூகி, யோகம், யௌவனம் என்பன உரையாசிரியர் காட்டும் உதாரணங்கள். யானை என்பதொன்று தவிர ஏனைய தமிழ் அல்ல.

ஞகாரம் ஆஎஒ என்னும் மூன்று உயிரோடு மட்டும் மொழிமுதலாம் எனத் தொல்காப் பியனார், ஆஎஒ என்னும் மூவுயிர் ஞகாரத் துரிய என விதித்தார். ஆயின், ஞமலி முதலிய சொற்களின் வழக்காற்றைக் கண்ட பவணந்தியார், அஆஎ ஒவ்வொடாகும் ஞம்முதல் என ஆகரமும் சேர்த்து விதித்தார். இவையெல்லாம் காலப் போக்கில், பிறமொழிச் சொற்கள் புகப்புக, ஒலி முறைகளும் மாறும் என்னும் உண்மையைத் தெரிவிக்கின்றன.

தமிழில் இவ்வாறு கூட்டொலிகள் குறை வாக இருத்தலாலும், பொருந்தா ஒலிகள் கூடாமல் இருத்ததலாலும், இவற்றிடையே ஒலி எளிமை கருதி உயிர் புக்கு நிற்றலாலும், சொற்கள் தம்மளவில் நீண்டு அமைந்து காணப்படுகின்றன.

தமிழ்மொழி நீண்ட சொற்களாலாகியது எ ன்று பிறர் கருதத்தக்கவாறு உள்ளது. வடமொழி முதலான இந்தோ ஐரோப்பிய மொழிகளில் இத்தகைய நெடுஞ்சொற்கள் (பெருகுகின்றன. இருக்கின்றன முதலியன போல) இல்லை என்பர். ஆயினும், அம் மொழிகளில் இத்தகைய எளிய முறையில் அமைந்த ஒலியசைகள் இல்லை என்பது எவரும் மறுக்க முடியாத உண்மை யாகும். அவற்றின் சொற்கள் சுருக்கியும் குறுக்கி யும் அமைக்கப் பெற்று முயற்சியுடன் ஒலிக்கத் தக்கனவாயிருக் கின்றன.

தமிழ்மொழியின் சொற்கள் நீண்டு பெருகி யிருப்பினும் எளிதில் ஒலிக்கப்படுவ னவாக உள்ளன. இது தமிழொலி முறையின் சிறப்பியல் பாகும்.

**தொடரும்...**


## முற்றம் இதழுக்கான விளம்பரக் கட்டணங்கள்

**பின்னட்டை பல வண்ணம் ரூ. 10,000/-**
**பின் உள் அட்டை பல வண்ணம் ரூ. 7,000/-**
**கருப்பு வெள்ளை முழுபக்கம் ரூ. 5,000/-**
**கருப்பு வெள்ளை அரைப் பக்கம் ரூ. 2500/-**
**க. வெ. கால் பக்கம் ரூ. 1500/-**

**சந்தா விவரம்: தனி இதழ் ரூ. 10/-**
**ஆண்டு சந்தா ரூ. 120/-**

சிறுகதை

இருங்கோவேள்

# கல்யாணக் கண்டாங்கி



பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதி. அங்கிலேயரின் ஆதிக்கத்தில் இந்தியா இருந்த காலமது. திருநெல்வேலிச் சீமையின் ஒரு சிற்றூர்.

அவ்வூரில் சின்னான் என்ற மனிதர் வாழ்ந்து வந்தார். அவருக்கு இரண்டு மகன்கள், நான்கு மகள்கள். ஏழ்மையான குடும்பம். ஆங்கிலே யருக்கு அடிவருடியாக இருந்த ஒரு பார்ப் பனனிடம் கடைநிலை ஊழியராக இருந்தார். அவரது மனைவியும் பிள்ளைகளும் அங்கே வேலை செய்தனர். இவர்களைப் போல் பலர் இருந்தனர். இவர்களை கண்காணிக்க, வேலை வாங்க இவர்களுக்கு மேலானவர்கள் என்று கருதப்படுகிற சாதிக்காரர்கள் இருந்தார்கள்.

சின்னானின் மகன்கள் இருவரும் மூத்த வர்கள். அந்த இரண்டு பேருக்குப் பிறகுதான் நான்கு பெண்பிள்ளைகள் பிறந்தனர். இவர் களில் மூத்த மகனுக்கு சின்னான் திருமணம் செய்து வைத்தார். பெண் வெளியூரைச் சேர்ந்தவள். திருமணத் தன்று அந்த மணப்பெண் அணிந் திருந்த சேலையை வைத்த கண் வாங் காமல் பார்த்தக் கொண்டிருந்தாள் சின்னானின் மூத்தமகள் அஞ் சலை.

அவளுக்குத் தெரிந்து அதுவரை அப்படி யொரு சேலையை அவள் பார்த்த தில்லை. அவளுக்கு மிகவும் பிடித்திருந்தது. நமக்கு இப்படி ஒரு சேலை கிடைக்குமா என்ற எண்ணம் அவளுக்குள் ஓட ஆரம்பித்து விட்டது.

அண்ணனுக்குத் திருமணம் முடிந்து அண்ணி தங்கள் வீட்டுக்கு வந்து, முதல்முதலாக அஞ்சலை அவள் அண்ணியிடம்

பேசியது, "அண்ணி இந்த சேலை பேரென்ன" என்பது தான். அவளும் அடங்க மறுக்கும் ஒரு பெருமை யோடு கல்யாணக் கண்டாங்கி என்றாள். இதை எவ்வளவு கொடுத்து வாங்கினீங்க என்றாள். அண்ணியும் மிக உயர்வாக "நாலு பொன் ஐந்து பணம். அதாவது ஒன்பது ரூபாய் ஆறு அனா" என்றாள். அஞ்சலைக்கு "அடி அம்மாடி" என்று சொல்ல வேண்டும் போல் தோன்றியது என்றாலும் கட்டுப்படுத்திக் கொண்டு வாய் பிளந்தாள்.

அஞ்சலை மனதுக்குள்ளே சொல்லிக் கொண்டாள். எனது திருமணத்திற்கும் இதுமாதிரிதான் கல்யாணக் கண்டாங்கி எடுக்க வேண்டும் என்று. முடிவும் செய்தாள். அதோடு நில்லாமல் அவள் தெய்வமாக நினைக்கும் முனியாண்டியிடமும் சொல்லி வைத்தாள். அய்யா முனியாண்டி நீதாய்யா என் கல்யாணத்துக்கு கண்டாங்கி எடுக்க அருள் கொடுக்கணும். என்று வேண்டிக்கொண்டாள். இப்போதைய நிலையில் தன் வீட்டில் அண்ணிக்காரி வீடு போல் மணமகன் வீட்டுக்கு காசு கொடுக்க மாட்டார்கள்.

அண்ணனுக்கு மட்டும் நல்ல இடமாகக் கிடைத்தது. ஒன்பது ரூபாய் ஆறு அனா கொடுத்து கல்யாணக் கண்டாங்கி எடுக்க முடியாது என்று சின்னான் கூறியபோது, சின்னானின் சம்பந்தியாகப் போகிற அந்தப் பெண் தனது கணவனின் காதைக் கடிக்க, அவரோ சின்னானிடம் கல்யாணக் கண்டாங்கிக்கு ஆகும் செலவில் பெரும் பகுதியை நாங்கள் தருகிறோம் என்று கூற சின்னானும் ஒத்துக் கொண்டு சீமைக்குச் சென்று அதை வாங்கி வந்தான். சின்னானுடன் சம்பந்தி வீட்டாரும் சென்று வந்தனர். இதை சின்னான் கூறக் கேட்டுக் கொண்டிருந்தவள் அஞ்சலை. சின்னான் சொல்லும்போது சேலையின் பெயரையோ, விலையையோ சொல்லவில்லை. அதனால்தான் அண்ணிக்காரி வந்தவுடன் முதல் பேச்சாக அவளிடம் விபரம் கேட்டு வைத்தாள். முனியாண்டியிடம் வேண்டுதலும் வைத்துவிட்டாள்.

வரப்போகிற மாப்பிள்ளை வீட்டார் தனக்கு கல்யாணக்கண்டாங்கி வாங்கி வராவிட்டால் என்ன செய்வது? அப்பாவிடம் முதலிலேயே நமது ஆசையை அப்பாவிடம் சொல்லிவிடலாம். அப்போதுதான் அப்பா மாப்பிள்ளை வீட்டாரிடம் சொல்லுவார் என்று முடிவு செய்து கொண்டாள். தனது திருமணப் பேச்சை எடுக்கிறபோது, முதல் பேச்சாக கல்யாணக் கண்டாங்கி பற்றிச் சொல்லி விட வேண்டும் என்று முடிவு செய்தாள். ஒருவேளை மாப்பிள்ளை வீட்டாருக்கு கல்யாணக் கண்டாங்கி வாங்கித் தர வசதி இல்லாவிட்டால் என்ன செய்வது? நமது வீட்டிலும் அந்த வசதி இல்லை. அண்ணி குடும்பம் போல் தன் குடும்பமும் கல்யாணக் கண்டாங்கிக்கு காசு கொடுக்க முடியாது என்ன செய்வது என்று யோசித்தாள். அப்போது அவளுக்கு ஒரு யோசனை தோன்றியது.

தன்னிடம் அடிக்கடி சின்னச்சின்ன வேலைகளைச் செய்யச் சொல்லி, தின்பதற்கு ஏதாவது தரும் வெள்ளைக்காரத்துரை அம்மா விடம் உதவி கேட்கலாம். எனக்குத்தின்பதற்கு எதுவும் வேண்டாம், என் கல்யாணத்திற்கு கல்யாணக் கண்டாங்கி எடுக்க மாப்பிள்ளை வீட்டாருக்கு காசு கொடுக்குமாறு சொல்லலாம் என்று முடிவு செய்து, மாலை மயங்கியதும் துரைஅம்மா வீட்டுக்குப் போனாள் அஞ்சலை. அவர்கள் சொன்ன வேலையைச் செய்தாள். வேலை முடிந்ததும் அந்த அம்மா தந்த ஏதோ ஒரு பெயர் தெரியாத உணவை வாங்க மறுத்து, கண்டாங்கிச் சேலை விசயத்தைச் சொன்னாள். அந்த துரைசானி அம்மாவோ பலமாகச் சிரித்தாள்.

நீ இப்போ இதைத் தின்றால்தான் உனக்கு கல்யாணக் கண்டாங்கி என்றாள். அஞ்சலையோ முன்பு எப்போதும் போல் ஆவலாக உண்ணாமல், இவர்கள் செய்வார்களா? என்ற ஐயத்தோடு உண்டாள். உண்டு முடித்ததும் அந்த துரைசானி அம்மாள் அஞ்சலையைத் தட்டிக் கொடுத்து, "உன் கல்யாணம் எப்போது என்று சொல், நான் உனக்கு நாங்கள் போடும் திருமண உடையையே வாங்கித் தருகிறேன் என்றாள். அஞ்சலையோ உடனடியாக மறுத்து, எனக்கு கல்யாணக் கண்டாங்கிதான் வேண்டும்" என்றாள். துரைசானி அம்மாவும் வாங்கித் தருகிறேன் என்று கூறவும் கொஞ்சம் நம்மதியுடன் வீடு நோக்கி நடந்தாள் அஞ்சலை.

நாட்கள் ஒடின. அஞ்சலையின் அடுத்த தங்கையும் பூப்பு எய்தினாள். சின்னான் அஞ்சலையின் திருமணம் பற்றி பேச்சே எடுக்க

வில்லை. இதற்கிடையில் துரைசானி அம்மாவும், துரையும் வேறு எங்கோ போவதாகப் பேசிக் கொண்டார்கள். அஞ்சலைக்கோ மனது மிகவும் வருத்தமாகப் போய்விட்டது. கல்யாணக் கண் டாங்கி வாங்கித் தருகிறேன் என்று சொன்னவர் போய்விட்டால் என்ன செய்வது? இந்த விசயத்தை துரைசானி அம்மாவிடமும் கேட்கத் துணிவில்லை அஞ்சலைக்கு.

எப்போதும் மகிழ்ச்சியாக வீட்டு வேலை களையும், தான் சொல்லுகிற எல்லா வேலை களையும் செய்யும் அஞ்சலை ஏன் இப்படி வருத் தத்தோடு வேலை செய்கிறாள் என்று எண்ணிய துரைசானி அம்மாள் அஞ்சலையிடம் விபரம் கேட்டாள். அஞ்சலைக்கு அழுகையே வந்து விட்டது. விம்மலுக்கு நடுவே "நீங்க ஊருக்குப் போறீங்களாமே எனக்கு கண்டாங்கிச் சேலை யாரு வாங்கித்தருவாங்க?" என்றாள். துரை சானிஅம்மாள் சிரித்துக்கொண்டே, நீ முதலில் இன்றைய வேலைகளை செய்து முடி. நாளைக் காலையில் இங்கே வா. என்று கூறினாள். அவள் கேட்கும்படியாகவே ஒரு வேலையாளை அழைத்து, "சின்னான் வேலைசெய்கிற முதலாளி வீட்டிற்குச் சென்று நாளை காலை, சின்னா னையும், அஞ்சலையையும் அழைத்துக் கொண்டு இங்கே வரவேண்டும் என்று அந்த முதலாளி யிடம் நான் சொன்னதாகச் சொல்" என்றாள்.

அடுத்தநாள் காலை சின்னான், அஞ்சலை, சின்னானின் முதலாளி ஆகிய மூவரும் துரை சானி அம்மா முன்பு வந்து நின்றனர். முதலா ளியைப் பார்த்த துரைசானி அம்மாள் அருகில் வரச்சொல்லி நாலு பொன் ஐந்து பணம் கொடுத்து இந்தப் பணம் அஞ்சலையின் திரும ணத்தின் போது அவளுக்கு கல்யாணக் கண் டாங்கி வாங்குவதற்காக. அவளது திருமணம் வரை நீங்கள் இதை பத்திரமாக வைத்திருந்து, அவள் திருமணத்தின்போது, அவளையும் அவளது அப்பா சின்னானையும் கடைக்கு அழைத்துக் கொண்டு போய் அஞ்சலைக்குப் பிடித்தமான சேலையை வாங்கிக் கொடுக்க வேண்டும். என்று கறாராகக் கூறினாள். அஞ்ச லைக்கோ மகிழ்ச்சி தாங்கவில்லை. துரைசானி அம்மாவின் கால்களில் விழுந்து வணங்கினாள். அடுத்த இரு தினங்களில் அந்த வெள்ளைக் காரர்கள் வேறு இடத்திற்கு மாற்றலாகிப் போனார்கள்.

அஞ்சலைக்கு திருமணம் பேசப்பட்டது. மாப்பிள்ளை வீட்டார் வசதியானவர்கள் இல்லை. இவர்களைப்போலவே இன்னொரு பண்ணையில் வேலை செய்பவர்கள்தான். எனவே கல்யாணக் கண்டாங்கி எடுப்பதற்கு அவர்களுக்கு வசதியில்லை. சின்னானோ அவர்களிடம் நீங்கள் கவலைப்படவேண்டாம். நாங்கள் வாங்கிக்கொள்கிறோம். என்று கூறி துரைசானி அம்மா பற்றியும் கூறிவைத்தார். அவர்களுக்கும் மகிழ்ச்சி. நமது சம்பந்தி பெரிய இடங்களில் எல்லாம் தொடர்பு வைத்திருக்கி றாரே என்று மகிழ்ந்தனர்.

திருமணத் தேதி குறித்தாகிவிட்டது. சின்னான் தனது முதலாளியிடம் சென்று "அய்யா அஞ்சலைக்கு கல்யாணக் கண்டாங்கி எடுக்க வேண்டும். எப்போது நகரத்திலுள்ள கடைக்குப் போகலாம்" என்று கேட்டான். முதலாளியோ " டேய் தரத்துக்குத் தகுந்த மாதிரி ஆசைப்படுடா, உங்கிட்ட இருக்கிற பணத்துல ஏதாவது துணிய வாங்கி கல்யாணத்த நடத்து, இல்லன்னா கல்யாணத்த நிறுத்திட்டு, உம் மகள நம்ம வீட்டுலேயே வேலை செய்யச் சொல்லு. அவ கல்யாணம் பண்ணி, புள்ளயப்பெத்து, யாருக் கிட்டயாவது வேலை செய்யதானே விடப் போறா, அதுக்கு அவளே நம்ம வீட்டுல வேலை பாக்கட்டும். போ, போ" என்று விரட்டினான். சின்னானுக்கோ எதுவும் பேசமுடியவில்லை. தனக்கு படியளக்கும் சாமியே இப்படி சொன் னால் என்ன செய்வது? வருத்தத்தோடு தனது குடும்பத்தாரிடம் சொன்னான். எல்லோரும் அழு தார்கள்.

அஞ்சலைக்கோ பொறுக்க முடிய வில்லை. பழைய துரைக்குப் பதிலாக புதிதாக திரு மணமாகி, தன் மனைவியை தனது நாட்டிலேயே விட்டுவிட்டு ஒரு துரை வந்திருந்தார். அவரிடம் ஓடினாள். விபரத்தைச் சொன்னாள். அவர் விசாரிக்கிறேன். நீ வீட்டுக்குப் போ என்றார். அஞ்சலை வீட்டுக்கு வந்தாள். அவளுக்கோ நம்பிக்கை குறைந்து போய்விட்டது. இருந்தாலும் தனது முனியாண்டி சாமியிடம் வேண்டிக் கொண்டாள்.

புதிய துரை அந்த பார்ப்பன முதலாளியை அழைக்க ஆள் அனுப்பினர். அவனும் வந்தான். அஞ்சலையின் கல்யாணக் கண்டாங்கி பற்றிப்

பேசினார். அவனோ அப்படி யாரும் என்னிடம் பணம் கொடுக்கவே இல்லை என்று பச்சையாகப் புளுகினான். அவனது முகத்தில் பொய் இருப்பது துரைக்குத் தெரிந்தது. சரி நீ போகலாம் என்று அனுப்பிவிட்டான். அடுத்த நாள் சின்னானை வரவழைத்தான். விபரம் கேட்டான். சின்னான் உண்மையைச் சொன்னான். துரையோ மாப் பிள்ளையின் தந்தையாரை அழைத்துவரச் சொன்னார். அவர் வந்ததும், திருமணத்தை இன்னும் நாற்பது நாட்கள் தள்ளி வையுங்கள் என்றார். அவர்களும் ஒத்துக்கொண்டு வீடு சென் றனர்.

சரியாக 39 வது நாள் துரையின் மனைவியும், அவளது அக்காவும் அவர்கள் தேசத்திலிருந்து வந்து சேர்ந்தனர். உடனே முதலாளிக்கும், சின் னானுக்கும், அஞ்சலைக்கும் அழைப்பு வந்தது. மூவரும் வந்து சேர்ந்தனர். துரை அமர்ந்தி ருந்தார். அவர் அருகில் அவரது மனைவி அமர்ந் திருந்தார். அந்த துரைசானி அம்மாவைப் பார்த்து மூவரும் தயக்கத்துடன் வணக்கம் கூறினார்கள். அவள் பழைய துரைசானி அம்மா போலவே இருந்தார்கள். ஆனால் வயது சிறுவயது. துரை முதலாளியிடம் மறுபடி கேட்டார். கல்யாணக் கண்டாங்கிக்கு பழைய துரைசானி அம்மா பணம் கொடுத்தார்களா? முதலாளியோ இல்லை துரை என்று சிறிது கலக்கத்துடன் சொன்னான். சரி ஒரு குடும்பம் வாழ்வதற்கு எவ்வளவு நிலம் வேண்டும் என்று கேட்டான்.

முதலாளியும் கூறினான். அதையே சின்னானிடம் கேட்டான். அவனும் முதலாளி சொன்ன நிலம் போதுமானது என்றான். சரி, இரண்டு குடும்பம் வாழ்வதற்கான நிலத்தை அவர்கள் கேட்கிறபடி நீ கொடுக்க வேண்டும். சின்னானுக்கும், அவளது மகள் அஞ்சலை குடும்பத்திற்கும் தான் அந்த நிலங்கள். அவர்கள் கேட்கிற இடத்தைக் கொடுக்க வேண்டும். நாளை பதிவு செய்து பத்திரங்களை என்னிடம் கொடுக்க வேண்டும் என்று கடுங்கோபத்துடன் சொல்ல வும் உள்ளே இருந்து ஒரு துரைசானி அம்மாள் வந்தாள். அவள் பழைய துரைசானி அம்மாள் தான். அஞ்சலை கண்களில் நீர் மல்க அவளது காலடியில் விழுந்தான். அந்த துரைசானி அம்மாவோ அவளை தூக்கி அணைத்துக் கொண்டாள்.

நாளைக்கு உன் திருமணம். உனது திருமணத்திற்காகத்தான் நான் இங்கே வந்தேன். இந்த துரைசானி அம்மாள் எனது தங்கை. இவளது கணவன் தான் என்னிடம் உனது சேலை பற்றிய செய்தியைச் சொன்னார். இப்போதே நான் குதிரை வண்டியை அனுப்பு கிறேன். நகரத்திற்குச் சென்று உனக்குப் பிடித்த மான கண்டாங்கிச் சேலையை வாங்கிக் கொள் என்று கூறிவிட்டு, அந்த முதலாளியை அழைத்து, நீ, சின்னானையும், அஞ்சலையையும் குதிரை வண்டியில் ஏற்றிக் கொண்டு அவர்கள் விரும்பும் கல்யாணக் கண்டாங்கியை வாங்கிக் கொடுக்க வேண்டும். நான் கொடுத்த பணத்திற்கும் மேலாக அதன் மதிப்பு இருந்தாலும் அதை வாங்கிக் கொடுக்க வேண்டும் என்று கட்டளையிட்டாள்.

அஞ்சலை தான் விரும்பியபடியே கல்யா ணக்கண்டாங்கியை வாங்கிக்கொண்டாள். அவளது திருமணம் துரைசானி அம்மாள் தலைமையில் இனிதே நடந்தது. முதலாளியின் உள்ளமோ வெந்தது. சின்னானின் மனமோ மகிழ்ந்தது.

◆

## அலட்சியம்

அடிக்கடி அழைத்தார்
வேலைக்கு
ஏதோ ஒரு
நினைவால்
பதில்கூட சொல்லாது
தன்வேலை
பார்த்தான்.

அழைத்தவனோ
வேறொருவரை
நியமித்தான்
அறிந்த அவனோ
அய்யோ விட்டோமே
வேலை போனதே!
தொடர்ந்து வரும்
வேலைகளும் போனதே
என்று பொறுமினான்.




**வைரி**

பொன். ஏழுமலை

**NOTA - None of the Above** யாருக்கும் வாக்களிக்க விரும்பவில்லை

என்ற இவ்வழிமுறை, **“49O”**என்றசட்டப் பிரிவின் கீழ் கடந்த 60 ஆண்டுகளுக்கு மேலாக நடைமுறையில் இருந்துள்ளது. **“49O”** என்பது வாக்கு ரகசியமானது என்ற சட்ட முறைக்கு எதிரானதாக, வெளிப்படையாகச் செய்யவே வழி கோலியதால், மக்கள் அதைப் பயன்படுத்த அச்சப்பட்டு தவிர்த்தனர். இப்படி ஒரு விதியை வகுத்தவர்களின் உள்நோக்கம் ஆய்வுக்குரியது. இது போன்றே பெரும்பாலான சட்டங்கள், மேலோட்டமாக பார்க்கும்போது மக்களுக்கான அக்கறையின் பார்ப்பட்டது போலத் தோற்றம் அளிக்கின்றன. ஆனால் நடைமுறையில் சட்டத்தின் வழியே அது மறுக்கப்பட்டு, ஆதிக்க சக்திகளின் நலன்களைக் காக்கவே பயன்பட்டு வந்துள்ளது. விழிப்புணர்வு குறைந்த, படித்த, படிப்பறிவற்ற மக்களை தன்னல நோக்கம் கொண்ட அரசியல் கட்சிகள், தங்களது பேச்சு வன்மையால் படிப்பறிவற்ற மக்களை தன்னல நோக்கம் கொண்ட அரசியல் கட்சிகள், தங்களது பேச்சு வன்மையால் ஏமாற்றி, வாக்குகள் பெற்று, அரசாண்டு தங்கள் குடும்பத்தை வளப்படுத்திக் கொண்டதே கடந்த கால வரலாறு. இப்படி பல கட்சிகளிடம் மாறி மாறி ஏமாறுவதையே தங்கள் நடைமுறையாகக் கொண்ட மக்கள், இந்த மக்களாட்சி முறை (ஜனநாயகம்) சரியனது தானா? என்ற கேள்வி எழக் காரணிகளாகின்றனர் என்பது விரும்பத்தாகாதெனினும், உண்மையே!




# NOTA யாருக்கும் வாக்கில்லை

கடந்த தேர்தலில் **NOTA** எனும் வழி முறையை முறையாகப் பயன்படுத்தியிருந் தால், தமிழ்நாடு உலகத்தின் பார்வையில் மிக உயர்ந்து நின்றிருக்கும். இது ஒன்றே இன்றைய சூழலில், விழிப்புணர்வுற்ற தமிழக வாக்காளர்களின் வெளிப்பாடாக இருந்திருக்க வேண்டும்.

அதற்கான காரணங்களாவன:

1. காங்கிரசு / தி.மு.க. : இவ்விரு கட்சிகளுமே தமிழக மக்களின் வாழ்நிலை சிக்கலான காவிரி, முல்லை பெரியாறு, கூடங்குளம் அணு உலை போன்றவற்றிலும், ஈழத் தமிழ் மக்களின் இனப்படுகொலை என்ற உணர்வு நிலைப்பாட்டி லும், ஆளுங்கட்சிகளாக இருந்து வெளிப்படை யாகக் கேட்டினைச் செய்து மக்கள் விரோத அரசாக இருந்தன என்பதால் வெறுத்து ஒதுக்கப்பட வேண்டியவைகளாயின.

2. பா.ஜ.க : இன்று ஆளுங்கட்சியாக பொறுப்பேற்றுள்ள இக்கட்சி காங்கிரசு கட்சியின் அனைத்து தமிழக விரோத குணங் களுடன் மத வெறியையும் சேர்த்துக் கொண் டிருப்பதால் நமது வாக்கினைப் பெறத் தகுதியற்றதாகிறது.

3. கம்யூனிஸ்டு கட்சிகள்: ஒப்பீட்டளவில் மக்களுக்கான சேவையில் சிறப்பாக பணியாற்றும் இவ்விரு கட்சிகள், இந்தியாவின் இறையாண் மையை மட்டுமே பேசி, பல தேசிய இனங்களின் இறையாண்மையை மறுத்து, மக்களிடமிருந்து அன்னியப்பட்டுப் போய்விட்டன. இதிலும் முரண்பாடான நிலையை, குறிப்பாக மார்ச்சிய கம்யூனிஸ்டு கட்சி எடுத்துள்ளது என்பது அதன் கருத்தியல் வறட்சியை / பச்சோந்தித் தனத்தை வெறிப்படுத்துகிறது. எனவே இவைகளும் ஒதுக் கப்படவேண்டியகளாகின்றன.

4. எனவே பா.ஜ.க., கிரங்கிரசு, கம்யூனிஸ்டு கட்சிகள் தேசிய கொள்கை கொண்ட கட்சி களாக இல்லை, பல மாநில மக்களின் நலன் களின், நியாயமான உணர்வுகளின், முரண்பாடு களின்போது பச்சோந்திகளாக நடந்துகொண் டன என்பது வெளிப்படையாகத் தெரிந்த உண் மையே.

5. மாநிலக் கட்சியான தி.மு.க., திரு.மு. கருணாநிதி குடும்பக் கட்சியாக உள்ளது. அக் குடும்பத்தின் இறுக்கமானப் பிடியிலிருந்து தப்பிக்க, தி.மு.க.கட்சிக்கே இன்றைய சூழலில் வழியில்லை. தொடர்ந்து பல தோல்விகளைப் பெற்றால் மட்டுமே, அக்கட்சி பழைய கட்சியாக, கொள்கைகளின் உறைவிடமாக மாறமுடியும்.

6. அ.தி.மு.க. ஜெயலலிதா தலைமையிலான இக்கட்சி, பெயரில் திராவிடத்தைத் தாங்கியிருந் தாலும், பார்ப்பனியத் தன்மை கொண்டிருப்பதில் வியப்பேதுமில்லை. மக்களின் அறியாமையையும், அவர்களின் கருணாநிதியின் மீதான அளவற்ற வெறுப்பையுமே, அடிப்படையாகக் கொண்டு ஆட்சியைப் பலமுறை கைப்பற்றியுள்ளது அவலமானச் சூழலே.

இம்முறையும் அவ்வாறே மிகச் சிறப்பாக வெற்றியைப் பெற்றுள்ளது. இது நாள் வரை காங்கிரசையும், தி.மு.க.வையும் கடுமையாகச் சாடுவதையே தனது மூலக் கொள்கையாக, நடைமுறைத் தந்திரமாகக் கொண்டு செயல் பட்ட ஜெயலலிதா, இப்போது தனது நண்பரான நரேந்திரமோடி இந்தியப் பிரதமராகிவிட்ட நிலையில், **செயல்படுவதைத் தவிர**, வேறு வழிகளில் (கடந்த காலத்தைப் போலத் தூற்று வதில்) மக்களைத் திருப்திபடுத்த முடியாது. இந்நிலையில் அவரின் செயல்பாடு **அவரின் உண்மைத் தன்மையை** நிச்சயமாக வெளிப் படுத்தும்.

7. ம.தி.மு.க. தவிர்த்த பல சிறிய கட்சிகள் / சாதிக் கட்சிகள், அரசியல் கொள்கையற்று, நத்திப் பிழைப்பதையே கொள்கையாகக் கொண்டிருக்கும் சூழலில், அவைகளைப் பட்டியலிட்டு திறனாய்வு செய்வது வீண் வேலை என்பதால் தவிர்க்கிறேன்.

8. இப்படிப்பட்டச் சூழலில் “யாருக்குத்தான் வாக்கு?'' என்ற கேள்வி எழுகிறது. அது யாருக்குமே இல்லை என்பதுதான் சரியான முடி வாக, வரலாறு போற்றும் முடிவாக, சாதனை படைக்கும் முடிவாக இருந்திருக்கும் தமிழக

மக்கள் விழிப்புணர்வு பெற்றவர்களாக இருந்தி ருப்பார்களானால்...!

"ஒரு நாட்டில் கேடுகள், அயோக்கியர்களால் விளைவதைவிட, அறிஞர்களின், நல்லவர்களின் மவுனத்தினால், செயலற்றதன்மையினால் அதிகம் விளைந்திருக்கின்றன" இந்த மாவீரன் நெப்போலி யனின் கூற்றிற்கு தமிழ்த்தேசிய சிந்தனை யாளர்கள் சரியான எடுத்துக்காட்டாக விளங்கு கின்றனர்.

நல்லவர்களாக, உண்மையானவர்களாக, மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்ற முனைப்பு உள்ளவர்களாக விளங்குகின்ற கோடிக்கணக்கான தமிழ்த்தேசிய சிந்தனையா ளர்கள், செயல்பாட்டாளர்கள், பொதுமக்கள் ஒருங்கிணைந்து செயல்பட்டிருந்தால் இந்நிலை தவிர்க்கப்பட்டிருக்கும், பணபலமும், அதிகார பலமும், கோலோச்சும் இத்தேர்தலில் இவர்கள் முனைந்து செயல்பட்டு **NOTA** வைப் பயன் படுத்தியிருந்தால், தமிழகத்தின் நலன்கள், ஈழச்சிக்கலில் இந்திய அரசின் செயல்பாடு ஆகியவற்றில் ஒரு பொதுவாக்கெடுப்பாக இத் தேர்தல் அமைந்திருக்கக்கூடும்.

இதைத் தவறவிட்ட தமிழ்த் தேசியச் சிந்தனையாளர்கள் **இனிமேலாவது ஒன்றி ணைந்து,** தமிழ் மக்களுக்கு சரியான வழியைக் காட்ட வேண்டும். அன்றில், அவர்களும் மற்ற அரசியல் கட்சி களைப்போல மக்கள் மன்றத்தில் குற்றவாளி களாகவே கருதப்படுவார்கள்.

தமிழகத்தின் இறையாண்மையைத் தவிர்த்த, இந்திய இறையாண்மை பகுத்தறிவுக்கு எதிரானது. மக்களாட்சி முறைக்கு எதிரானது. தன்மானத்திற்கு எதிரானது. ஏன்? மானுட மாண்பிற்கு எதிரானது ! **உணருவார்களா "தமிழ்த் தேசியர்கள்" !**


**பொன். ஏழுமலை**

*மின்பொறிஞர் / சமூக ஆர்வலர்*

*அலைபேசி* ***94 45 87 22 85***

elumalaip 1951@yahoo.com


◆

## துளிகள்



### மழை

வானத்தில் ஒன்று இரண்டு
நட்சத்திரங்கள் காணமல் போனதால்
நிலா அழுகின்ற கண்ணீர்த்துளி
மழை..!

நீரின்றி
அமையாது உலகு
வான் மழையின்றி
குடையேது அழகு!

### வானம்

மழையை தயாரிக்கிற
நீர் தொழிற்சாலை
வானம்!

நிலவு, சூரியன்
குடியிருக்கிற பரந்து விரிந்த
வீடு..
வானம்!

### மேகம்

வானத்தின்
கூந்தலில் பூத்துருக்கிற
வெள்ளைப் பூக்கள்
மேகம்!

நிலா..
படுத்து உறங்கிற
பஞ்சு மெத்தை
மேகம்!

தண்ணீர் உற்பத்தியாகிற
வான நதி
மேகம்!


R. எழிலரசி

சிறுகதை

இருங்கோவேள்

# நெல்லுப்பட்டறை

ஊடகச் செல்வன் என்பது அவனது பெயர். தமிழீழ மக்கள் பேசுகிறபோது, குறிப்பாக தமிழீழத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களின் நேர்காணல்களையும், புத்தகங்களையும் கவனமாக கேட்டு, படித்து வருகிற ஊடகச் செல்வனின் தந்தை வேலன் அவர்கள், ஊடாக என்ற வார்த்தையை மிகவும் விரும்பி, தனது ஒரே மகனுக்கு ஊடகச் செல்வன் என்று பெயர் வைத்திருந்தார். ஊடாக என்பதற்கும், ஊடகம் என்பதற்கும் பொருள் வேறாக இருப்பினும், வேர் ஒன்றுதான் என்பதை அறிந்தவர் வேலன் அவர்கள்.

ஊடகச் செல்வன் பெயரை அறிந்தவர்கள் எல்லாம், அந்தப் பெயருக்குரிய பொருளைத் தெரிந்திருந்தார்கள். ஏனென்றால் இந்தப் பெயரைக் கேட்டவுடன், அல்லது கேள்விப்பட்டடன், “அப்படீன்னா என்ன பொருள்?“ என்றுதான் கேட்பார்கள். கேட்பவர்கள் அனைவருக்கும் பதில் கிடைத்துவிடும். இந்தப் பெயர் வைத்த ஊடகச் செல்வனின் அப்பாவை அனைவரும் பாராட்டினர். தங்களது பிள்ளைகளுக்கு நல்ல தமிழ்ப் பெயர்களைச் சூட்ட விரும்புபவர்கள், வேலன் அவர்களிடம் தான் வருவார்கள். அவரோ புதிய புதிய தமிழ்ப் பெயர்களை வைப்பார். சங்க காலத்து நல்ல தமிழ்ப் பெயர்களையும் வைப்பார். இவரது இச்செயலைப் பார்த்து அவ்வூர் மக்களும் சுற்றுப்புற ஊர்களில் உள்ள மக்களும் குறிப்பாக படித்தவர்கள் தங்களது பிள்ளைகளுக்கு தமிழ்ப் பெயர்ளை வைத்து மகிழ்ந்தார்கள்.

வேலன் அவர்களிடம் இன்னுமொரு வேறுபாடு என்னவென்றால், விவசாயத்தில் மற்ற விவசாயிகள் இயந்திரங்களின் துணையையும், இரசாயணங்களின் துணையையும், களைக்கொல்லிகளின் துணையையும் கொண்டு இலகுவாகச் சம்பாதித்தார்கள். ஆனால் வேலன் அவர்களோ பழைய முறையையே பின்பற்றி வந்தார்.



தன் வீட்டில் உள்ள ஏர் மாடுகளைக் கொண்டே நிலத்தை உழுதார். நிலத்தின் வளத்திற்காக தன்னிடம் உள்ள ஆடுகளும், ஏர்மாடுகளும், இரண்டு பசுமாடுகளும் போடும் புழுக்கை, சாணங்களையும், தான் வளர்க்கும் கோழி, புறாக்களின் கழிவுகளையும் கொல்லை களில் தினமும் கொண்டுபோய் கொட்டி வருவார். பயிர் இருக்கும் காலங்களில் அவை களை வீட்டின் அருகே உள்ள குப்பைக் குழியில் கொட்டி சேமித்து அறுவடை முடிந்ததும் அதை கொல்லைகளில் கொட்டி வருவார்.

நிலத்தில் விதைத்த பயிர் வளரும் நேரங்களில் கட்டுபடியாகாவிட்டாலும் களைபிடுங்குவதற்கு ஆட்களை அழைத்து களை எடுக்கச் சொல்வார். களைக்கொல்லிகளை பயன்படுத்துவதே இல்லை.

கதிர் முற்றி அறுவடை செய்யும் நேரங்களில் இயந்திரம் மூலம் அறுக்காமல் ஆட்களை வைத்து அறுத்து களம் சேர்த்து, அடித்து, தூற்றி சேர்த்து வைப்பார். அப்படித்தான் இந்த முறையும் செய்தார். அறுவடை முடிந்ததும் கிடைத்த நெற்களை மூடைகளில் கட்டி, தினமும் காலையில் வெயிலில் உலர்த்தி மாலையில் கட்டி வைப்பார். இவ்வாறு சில நாட்கள் செய்து நெல் நன்றாக காய்ந்து விட்டது என்ற நம்பிக்கை வந்ததும் நெல்லுப்பட்டறை செய்து அதில் நெல்லைப் பாதுகாப்பாக வைக்க வேண்டும் என்று தனது மனைவியிடம் பேசிக்கொண்டி ருந்தார்.

இதைக் கேட்டுக் கொண்டிருந்த ஊடகச் செல்வனுக்கு நெல்லுப்பட்டறை எப்படிச் செய்கிறார்கள் என்று பார்க்க வேண்டும் என்ற ஆவல் ஏற்பட்டது. அவனுக்கு விபரம் தெரிந்து அவன் வீட்டில் மட்டும்தான் நெல்லுப்பட்டறை இருந்திருக்கிறது. அதை எப்படி அமைக்கி றார்கள் என்பதைத் தெரிந்து கொள்வதற்கான அகவையும் ஆர்வமும் இப்போதுதான் அவனுக்கு வந்திருக்கிறது.

எப்போதும் நெல்லுப்பட்டறை அமைக்கும் இடத்தில் அவன் வீட்டு முற்றத்தின் கிழக்குப் பகுதி ஓரத்தில அவனது அம்மா சாணத்தைக் கரைத்து அந்த இடத்தில் மெழுகினார்கள். காலையும் மாலையும் என மூன்று நாட்கள் சாணம் தெளித்து மெழுகப்பட்டது. அதன்பின்பு சிறிதளவு நெல் கொட்டப்பட்டது. சாணம் தெளிக்கப்பட்ட இடம் முழுவது பரவலாக நெல் கொட்டப்பட்டது.

சுற்றிலும் காய்ந்த வைக்கோலில் சிறிது நீர் தெளித்து வைக்கோல் பிரி செய்யப்பட்டு, வட்டமாக வைக்கப்பட்டி ருந்தது. அந்தப் பிரிக்கும் நெல்லுக்கும் இடையில் கதிர் அடிக்கப்பட்ட மாடுகளில் கால்களில் மிதி படாத தளுக்குகளை செங்குத்தாக நிறுத்தி வைத்தார் கள். இப்படியாக நெற்கள் கொட்டப் பட்டு, அவை வெளியில் வராதவாறு தளுக்கு களாலும், வைக்கோல் பிரிகளாலும் சுற்றப்பட்டு, இறுதியில் மூடுவதற்கு தளுக்குளை வைத்து மூடி னார்கள். அதற்கு மேலும் தளுக்குகளை கோபுர வடிவில் வைத்தார்கள்.

அதற்கு மேல் காய்ந்த வைக்கோல்களை வைத்து, சற்று கெட்டியாக கரைத்த சாணத்தை அதன் மேல் தெளித்தார்கள். வாரத்திற்கு இரு முறை அதைச்சுற்றி சாணம் தெளிப்பது ஒன்றே அந்த நெல்லுப்பட்டறையை பராமரிக்கும் வேலையாக இருந்தது. ஐந்தாறு மாதங்கள் கழித்து, நெல் தேவை வந்தது. நெல்லுப்பட் டறையை பிரித்து தேவையானதை எடுத்துக் கொண்டு, பழைய படி மூடிவிட்டார்கள். இப்போது உயரம் கொஞ்சம் குறைந்துவிட்டது.

ஊடகச் செல்வனுக்கு இந்த நெல்லுப்பட் டறை மிகுந்த வியப்பைத் தந்தது, பணம் செலவு இல்லாத ஒரு நெல் பாதுகாப்பை அப்பா செய்துவிட்டாரே என்று வியந்தான். சரியான பாதுகாப்புக் கிடங்கு இல்லாமல் இந்திய அரசாங்கத்தின் பண்டகசாலையில் உள்ள நெல் எல்லாம் மழையில் நனைந்து வீணாகிப் போனதை நாளிதழில் பார்த்திருக்கிறான்.

]நெல் லையும் கோதுமையையும் சரியாக பாதுகாக்கா ததால் எலிகள் தின்கிற படங்களை எல்லாம் பார்த்திருக்கிறான். செலவே இல்லாமல், நிலத்தில் விளைந்தவற்றைக் கொண்டே, தானியங்களைப் பாதுகாக்கும் முறை என்பது தமிழர்களிடம் மட்டும்தான் இருக்கிறது. அந்த இனத்தில் தனது குடும்பமும் ஒன்று என்று நினைத்தபோது ஊடகச் செல்வனின் மனம் உவகையினால் நிரம்பியது. ◆

# 8

# புரட்சிக்கவி

பாரதிதாசனார்




புரட்சிக்கவிஞர்

'காதலனைக் கொலைக்களத்துக் கனுப்ப கண்டுங்
கன்னியெனை மன்னிக்கக் கேட்டுக் கொண்ட
நீதிநன்று மந்திரியே! அவன்இ றந்தால்
நிலைத்திடும்என் உயிரெனவும் நினைத்து விட்டாய்!
சாதல்எனில் இருவருமே சாதல் வேண்டும்
தவிர்வதெனில் இருவருமே தவிர்தல் வேண்டும்
ஓதுகஇவ் விரண்டிலொன்று மன்ன வன்வாய்!
உயிர்எமக்கு வெல்லமல்ல!' என்றாள் மங்கை.

'என்ஆணை மறுப்பீரோ சபையிலுள்ளீர்!
இசைகிடந்த என்செங்கோல் தன்னை வேற்றார்
பின்நாணும் படிசும்மா இருப்ப துண்டோ?
பிழைபுரிந்தால் சகியேன்நான்! உறுதி கண்டீர்
என்ஆணை! என்ஆணை!! உதார னோடே
எதிரிலுறும் அமுதவல்லி இருவர் தம்மைக்
கள்மீதி லேகிடத்திக் கொலைசெய் வீர்கள்
கடிதுசெல்வீர்! கடிதுசெல்வீர்!! என்றான் மன்னன்.

அவையினிலே அசைவில்லை பேச்சு மில்லை,
அச்சடித்த பதுமைகள்போல் இருந்தர் யாரும்!
சுவையறிந்த பிறகுணவின்சுகம்சொல் வார்போல்
தோகையவள் 'என்காதல் துரையே கேளாய்!
எவையும்நம்மைப் பிரிக்கவில்லை, இன்பம் கண்டோம்
இறப்பதிலும் ஒன்றானோம்! அநீதி செய்த
நாவையுடைய மன்னனுக்கு நாட்டு மக்கள்
நற்பாடம் கற்பியா திருப்ப தில்லை.

'இருந்திங்கே அநீதியிடை வாழ வேண்டாம்
இறப்புலகில் இடையறா இன்பங் கொள்வோம்!
பருந்தும்,கண் மூடாத நரியும் நாயும்,
பலிபீட வரிசகைளும் கொடுவாள் கட்டும்
பொருந்தட்டும், கொலைசெய்யும் எதேச்சை மன்னன்
பொருந்தட்டும், பொதுமக்கள் ரத்தச் சோற்றை
அருந்தட்டும்!' என்றாள், காதலர்கள் சென்றார்!
அதன்பிறகு நடந்தவற்றை அறிவிக் கின்றேன்.



‘கொலைக்களத்தில் கொலைஞர்களும் அதிகா ரங்கள்
கொண்டவரும் காதலரும் ஓர்பால் நின்றார்,
அலைகடல்போல் நாட்டார்கள் வீடு பூட்டி
அனைவருமே வந்திருந்தார். உதார னுக்கும்
சிலைக்குநிகர் மங்கைக்கும் ‘கடைசியாகச்
சிலபேச்சுப் பேசிடுக’ என்றுசொல்லித்
தலைப்பாகை அதிகாரி விடைதந் திட்டான்,
தமிழ்க்கவிஞன் சனங்களிடை முழக்கஞ் செய்வான்,

‘பேரன்பு கொண்டவரே, பெரியோ ரே,என்
பெற்றதாய் மாரே,நல் இளஞ்சிங் கங்காள்!
நீரோடை நிலங்கிழிக்க, நெடும ரங்கள்
நிறைந்துபெருங் காடாக்க, பெருவி லங்கு
நேரோடி வாழ்ந்திருக்கப் பருக்கைக் கல்லின்
நெடுங்குன்றில் பிலஞ்சேர, பாம்புக் கூட்டம்
போராடும் பாழ்நிலத்தை அந்த நாளில்
பதுக்கியவர் யார்? அழகு நகருண் டாக்கி!

‘சிற்றூரும், வரப்பெடுத்த வயலும், ஆறு
தேக்கியநல் வாய்க்காலும், வகைப் படுத்தி
நெற்சேர உழுதுமுது பயன்வி ளைக்கும்
நிறையுழைப்புத் தோள்களெலாம் எவரின்
தோள்கள்?
கற்பிளந்து மலைபிளந்து கனிகள் வெட்டிக்
கருவியெலாம் செய்துதந்த கைதான் யார்கை?
பொற்றுகளைக் கடல்முத்தை மணிக்கு லத்தைப்
போய்எடுக்க அடக்கியமூச் செவரின் மூச்சு?

**தொடரும்...**

# உண்மையைத் தேடி

3 • இராஜாசிங்

பொய்க்கும் புரட்டுக்கும் பேர் பெற்றவரா கவே இருந்திருக்கிறார் அந்த விசாரணை அதிகாரி. அதற்கு இன்னும் ஒரு உதாரணம் என்னவென்றால், மரகதம் சந்திரசேகர், இந்திராகாந்தி அம்மையார் அவர்களின் வீட்டிற்கு நேராகச் செல்லும் அதிகாரம் பெற்றவர். ஆனால், இந்திராவின் மறைவுக்குப் பின் ராசீவ்காந்தி ஐந்து ஆண்டுகள் ஆட்சியிலும், மேலும் 5 ஆண்டுகள் ஆட்சியில் இல்லாமலும் இருந்திருக்கிறார்.



அந்த பத்து ஆண்டுகளில் ராசிவ் காந்தி வீட்டில் மரகதம் சந்திரசேகர் அனுமதிக்கப் படவில்லை.

விசாரணை அதிகாரியின் கூற்றுப்படி, இந்த அவமானத்தால் அந்த காங்கிரஸ் தலைவி ஏன் இந்த விபரீத முடிவை எடுத்திருக்கக் கூடாது. மனித மனம் மாறுவது இயற்கைதானே.

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த மரகதம் சந்திரசேகரின் மகனிடம் ஒரு புகைப் படத்தைக் காட்டி இவரைத் தெரிகிறதா என்று கேட்டபோது தெரியாது என்று சொல்லியி ருக்கிறார். அப்பொழுது அவர் அருகில் இருந்த குழந்தை அவரைத் தெரியும் என்ற இயற்கை யான உந்துதலில் ஏதோ சொல்ல முயன்றிருக் கிறது. இக்காட்சி விசாரணை அதிகாரியை அதிர்வுக்குள்ளாக்கியது என்று அவரே எழுதுகிறார்.

அவர் தன் புத்தகத்தில் சொல்லும் போது, தன் அனுபவத்தில் பல விசாரணைகளை நடத்தி உள்ளேன், இந்தக் குழந்தையின் அசைவு, அந்தப் பெண்ணை தனக்கு முன்பே தெரியும் என்று கூறுவது போல் அமைந்திருந்தது என்று குறிப்பிட்டு, மரகதம் சந்திரசேகரின் மகன், எதற்கு வம்பு என்று நினைத்துப் பயந்து, தெரியாது என்று கூறுகிறார் என்று எண்ணியதாக குறிப்பிடுகிறார் ரகோத்தமன்.

லலித் சந்திரசேகரை விசாரிக்க வேண்டும் என்று மேல் அதிகாரி கார்த்திகேயனிடம் ரகோத் தமன் சென்று அனுமதி கேட்டபோது, அனுமதி மறுக்கப்பட்டதும் அல்லாமல், மேல் அதிகாரிகள் கவனித்துக் கொள்வார்கள் என்று பதில் சொல்லி விட்டார் கார்த்திகேயன். மேல் அதிகாரிகள் விசாரித்தபோது தேவையான பதில் கிடைக்க வில்லை, அல்லது பதிவுசெய்யப் படவில்லை என்று கூறுகிறார் ரகோத்தமன்.

மோகன்ராஜ் என்ற ஆய்வாளர் ரகோத்தமன் அமெரிக்கா சென்று வந்த போது லலித் சந்திர சேகரின் உதவியாளர் டரியஸ் பீட்டரின் மனைவி கொடுத்த கடிதத் தைப் பற்றித் தெளி வாகக் கூறி யிருக்கிறார். இந்த இடத்தை விசாரிக்காமல் கார்த்தி கேயன் முட்டுக் கட்டை போட்டு இருக்கிறார்.

இந்த விவகாரம் அனைத்தும் தெரிந்த அதிகாரி எப்படி உச்சநீதிமன்றம் சென்று வாதாடினார்? இச்செயல் உச்சநீதி மன்றத்தை ஏமாற்றும் செயல் அல்லவா? பிற்காலத்தில் நீதிமன்றம் தவறான முன் உதாரணத்தை வைத்துச் சென்றதாக வரலாறு கூறுமே!

ஒரு ஏழைப்பெண், தன்னிடமிருந்து எடுத்த நூறுரூபாய் கட்டு இவருக்கு சந்தேகத்தை ஏற்படுத்தியது. ஒரு குழந்தை சொல்ல ஏதோ சொல்ல வருகிறது என்று சந்தேகித்த விசாரணை அதிகாரிக்கு, சகல அதிகாரமும் கொண்ட ஒரு மேல் அதிகாரி தவறு செய்கிறார் என்று பொது மக்கள் கூட புரிந்து கொள்ளும் உண்மையை அவர் புரிந்து கொள்ளாமல் போனதன் இரகசியம்தான் என்னவோ?

தனது மேல் அதிகாரி செய்த தவறு அனைத்தையும் தெரிந்துகொண்டு அதை மனதிற்குள்ளே பூட்டி வைத்திக்கொண்டு, தப்பிக்கை வைத்தோம், தப்பிக்க விட்டோம் என்றும் பெரும்பாலான அரசியல்வாதிகளை விசாரிக்கவில்லை என்று தெளிவாக தன் புத்தகத்தில் எழுதிவிட்டு உச்சநீதிமன்றம் சென்று நிதிபதிக்கு முன்பாக பொதுமக்கள் முன்னிலை யிலும் நான் சரியாக, கவனமாக, உண்மையாக, அனைவரையும் விசாரித்தேன். உண்மையை கண்டறிந்தேன். என்று கூறி இருப்பது நீதிமன்றத்தை அவமதிப் பதாகாதா? நீதிபதிகளை இழிவு படுத்துவதா காதா? பொதுமக்களை ஏமாற்றுவ தாகாதா? இச்செயல் நாட்டின் கௌரவத்தை குலைக்கும் செயல் அல்லவா?

அவர் மேலும் தன் புத்தகத்தில் பலரை விசாரிக்க அனுமதிக்கவில்லை என்று கூறுகிறார். இவர்தான் விசாரணை அதிகாரி. ஆனால் விசாரிக்கவில்லை என்றும் கூறுகிறார் இது எவ்வளவு பெரிய அபத்தம். இவர் யாரை ஏமாற் றுவதற்காக இப்படிக் கூறுகிறார்.

இப்படி தெளிவாக மக்களை ஏமாற்றித் திரியும் இப்படிப் பட்ட அதிகாரிகளை நீதி மன்றம் தானாக முன் வந்து நடவடிக்கை எடுத்து நீதியைக் காப்பாற்ற வேண்டும்.

உலகத்திலேயே இரண்டாவதாக அதிக அளவு கொடுமைப்படுத்தப்பட்ட இனம் தமிழ் இனம்தான். இன்று வரை தமிழ் இனம் கொடு மைகளை அனுபவித்துக் கொண்டுதான் இருக்கிறது.

தந்தி தொலைக்காட்சியில், நீங்கள் ஏன் சுப்பிரமணியசாமியை விசாரிக்கவில்லை என்று ரகோத்தமனிடம் கேட்கப்பட்டபோது, அவர் கூறுகிறார், எங்களுக்கு அவர் மீது எந்த சந்தே கமும் வரவில்லை என்று. ஆனால் அன்றைய பாரதப் பிரதமர் கூட்டிய கூட்டத்தில் விடுத லைப்புலிகள்தான் காரணம் என்று சுப்ரமணி யசாமி கூறியிருக்கிறார்.

அப்படி யென்றால் அவரை ஏன் விசாரித்தி ருக்கக்கூடாது? அதற்கான ஆதாரத்தை அவரிடம் இருந்து ஏன் பெற்றி ருக்கக்கூடாது? இது விந்தையாக இல்லை. விசாரணை அதிகாரிகளின் விசாரணை எந்த லட்சணத்தில் இருந்திருக்கிறது என்று பாருங்கள்.

விடுதலைப்புலிகள் அமைப்பில் தவறு செய்யும் இளைஞர்கள் நீக்கப்பட்டு இருக்கின் றனர். ரா அமைப்பினால் சகோதர யுத்தம் மூண்டபோது மற்ற இயக்கத்தில் உள்ளவர்கள் ஒதுக்கப்பட்டனர். அவர்களில் சிலர் இயக்கத் தோடு இணைந்து கொண்டனர். சிலர் வெளி நாடுகளில் தஞ்சம் புகுந்தனர். வேறுசிலர் குடும் பத்துடன் ஒதுங்கி வாழ்ந்து வந்தனர். அவ்வாறு பிழைப்புக்கு வாழ வழியின்றி இருந்த இளைஞர் களைப் பிடித்து, சிங்கள அரசு அவர்களை கூலிப்படைகளாக மாற்றின.

இந்திய அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதி களின் ஒத்துழைப்புடன் இந்த கொடுஞ்செயல் நடந்திருக்கிறது என்று கூறப்படுகிறது. இச்செயல் மன்னிக்கப்படக் கூடியதா?

மாற்று இயக்கத்தலைவர் பத்மநாபனைக் கொன்றவுடன் விடுதலைப்புலிகள் அடுத்தநாள் இலங்கையில் இருந்தனர். ஏன் ராசீவ் காந்தியைக் கொன்றவர்கள் மட்டும் தமிழகத்தில் சுற்றிக் கொண்டு இருந்தனர்? இப்படி ஒரு சந்தேகம் இயற்கையாக எழுகிறதுதானே. ஹரிபாபுவின் போட்டோ முக்கிய ஆதாரம் என்று கூறப் பட்டது.

அந்த ஆதாரம் கிடைத்திருக்க வில்லை என்றால், இந்த விசாரணை அதிகாரிகள் என்ன சொல்லியிருப்பார்கள் தெரியுமா? விடுதலைப் புலிகளின் தலைவர் பத்து படகுகளில் வந்து வெடிகுண்டை வீசி இதைச் செய்துவிட்டுப் போய்விட்டார்கள் என்று கூறி விசாரணையை முடித்திருப்பார்கள்.

ஏனெனில் தமிழன் ஏமாந்தவன். வீண் பழியைச் சுமப்பவன்.

ஆதிரை, ஏப்ரல் கடைசியில் வந்ததாகச் சொல்கிறார்கள். அதன்பின் தானு, சுபா வந்ததாகச் சொல்லி, வெளி உலகத்தில் உள்ள யாருக்கும் அவர்கள் மேல் சந்தேகம் வராதபடியும் இலங்கைப் பெண் என்று அறிந்துவிடாதபடியும் அவர்களுக்குப் பதில் நளினி பேசவேண்டும் என்று சிவராசன் கட்டளை இட்டதாகவும் தற் கொலைப்படையில் ஈடுபட்டு அவர்கள் காரி யத்தை நிறைவேற்றும்போது அவர்கள் மனதில் இறுக்கம் ஏற்படாமல் இருக்கவும், மனம் மாறாமல் இருக்கவும் ஒவ்வொருநாளும் ஒவ்வொரு இடமாக, உல்லாசமாகச் சென்றதாகக் கூறுகின்றார்.

சிவராசன் மே 21ஆம் தேதி அன்று யாரும் இங்கு இருக்க வேண்டாம் என்றும் அனைவரும் நேபாளம் வழியாக இந்தியாவை விட்டு வெளியேறும்படியாகக் கூறியதாக ரகோத்தமன் கூறுகிறார். ஆனால் 21ஆம் தேதி இரவு 11 மணி வரை எந்த இடர்பாடும் இல்லாமல் இலங்கைக்கு விடுதலைப்புலிகள் செல்ல முடியும். நேபாளம் வழியாக இந்தியாவைக் கடக்க வேண்டும் என்றால் இரண்டு அல்லது மூன்று நாள்வரை ஆகும்.

மாறாக இலங்கைக்குச் சென்றால், அன்று அங்கு ஆதிக்கம் செய்து கொண்டிருந்த விடு தலைப்புலிகள் இலங்கைக் கடற்கரை முழுவ தையும் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந் தனர். யார், யார் எந்த நேரத்தில் வந்தார்கள்? இந்தியாவில் என்ன செய்து விட்டு வந்தார்கள்? என்பது தெள்ளத்தெளிவாகத் தெரிந்துவிடும் என்பதால் நேபாளம் வழியாக வெளியேறும்படி இந்திய அதிகாரிகள் சிவராசனுக்கு ஆலோசனை கூறி இருக்கலாம்.

மேலும் விடுதலைப்புலிகள், லாஞ்சர், டீசல், பாத்திரங்கள், மற்றும் சிறிய யுத்ததளவாடங் களை இந்தியாவில் செய்து இலங்கைக்கு எடுத்துச் சென்றிருக்கின்றனர். அவர்களை வழிமறித்து கொடுமை செய்து, சிலரை குப்பி களைக் கடிக்கச் செய்து மரணம் அடையச் செய் துள்ளனர். இந்த நிகழ்வுகளைப் பெரிது படுத்தி கொலை செய்தது விடுதலைப் புலிகள்தான் என்று இந்தியாவையும் உலகத் தையும் நம்பச் செய்துள்ளனர்.

கொலை நடப்பதற்கு முன்பே நேபாளம் வழியாக எளிதாகக் கடந்து செல்ல சொல்லி இருப்பது, இப்பாதை தெள்ளத்தெளிவாக இந்தியர்களுக்குத்தான் தெரிந்து இருக்கும். எனவே கூலிப்படையை ஏவி, வழிநடத்தி யவர்கள் இந்தியாவைச் சேர்ந்தவர்களாகவும் இருந்திருக்கலாம் என்ற சந்தேகமும் வலுப் பெறுகிறது.

மேலும் விடுதலைப்புலிகளின் தாக்குதல் கொரில்லா தாக்குதல் முறையைச் சேர்ந்தது. அவர்கள் தாக்குதலை முடித்துவிட்டு உடனே தங்கள் இருப்பிடத்திற்கு வந்து சேர்ந்துவிடு வார்கள்.

ஆனால் இக்கொலையில் ஈடுபட்டவர்கள் என்று சொல்லப்படுபவர்கள் இருப்பிடம் திரும்பாமல் நேபாளம் வழியாகத் தப்பிச் செல்ல இருந்திருக்கின்றனர் என்ற செய்தி, விடுதலைப் புலி களின் மேல் உள்ள சந்தேகத்தை வலுவிலக் கச் செய்வதாகவே இருக்கிறது.

ஹெலிகாப்டர் கோளாறு ராசீவ் தாமதமாக வருகிறார் என்று சிவராசனுக்கு தெரிந்திருந்த தாக விசாரணை அதிகாரி கூறுகிறார். அன்று செல்போன் புழக்கத்தில் இல்லை. மேலும் இலங்கையில் இருந்து வயர்லெஸ் செய்தி வர வாய்ப்பில்லை.

அப்படியென்றால் அந்தக் காட்டுப்பகுதிக்கு எப்படி தெரிந்திருக்க முடியும்? உயர்அதிகாரிகள் மூலமாகவோ, காங்கிரஸ் தலைவர்கள் மூலமாகவோதான் தெரிந்திருக்கும். மேலும் அந்த வெடிகுண்டு ஜாக்கெட் மூன்று கிலோமுதல்

நான்குகிலோ எடைகொண்டதாக இருந்து இருக்கும் என்று சொல்லப்படுகிறது.

காற்றுப் புகாதாவாறு அமைக்கப்பட்டு இருக்கும். இதை சுமார் எட்டு மணி நேரம் தொடர்ந்து அணிந்திருந்தால், அப்பெண்ணுக்கு மன இறுக்கம் உண்டாகி குழப்பம் ஏற்பட்டிருக்க வேண்டும். அவர்களுக்கு உணவுக் கட்டுப்பாடு இல்லை, இரவு பிரியாணி சாப்பிட்டிருக் கிறார்கள் என்று விசாரணை அதிகாரிகள் சொல்கிறார்கள்.

எட்டு மணிநேரம் இயற்கை உபாதையை கழிக்க அவர்கள் சிரமப்பட்டு இருப்பார்கள்.

இதெல்லாம் விசாரணையில் எடுத்துக் கொள்ளப்படவில்லை. புலிகளின் தலைமை இடத்திலுள்ள கிட்டு இச்செயலை நாங்கள் செய்யவில்லை. இச்செயலைச் செய்த வர்கள் இந்தியாவில்தான் இருப்பார்கள் எனவே நீங்கள்தான் அவர்களைக் கண்டுபிடிக்க வேண்டும் என்று பேட்டி கொடுத்திருக்கிறார்.


கொலைக்கு காரணமானவர்கள், கொலை யைப் பற்றித் தெரிந்தவர்கள், கொல்லப்படப் போகிறார் என்ற செய்தியை பரப்பி இருக்க வேண்டும். ஏனெனில் அவரைத்தவிர மற்றவர் களை இந்தத் தாக்குதலில் இருந்து தப்பிக்க வைக்கவே இப்படிச் செய்யப்பட்டிருக்கலாம்.

சுமார் ஐநூறு காவலர்கள் அந்த இடத்தில் கூடியிருந்தும் மெட்டல் டிடெக்டர் போன்ற முக்கியக் கருவிகளின் சோதனை இல்லாமல் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். வந்தவர்களை ஒழுங்குபடுத்தவில்லை என்றால் மேல் அதிகாரிகளுக்கு அனைத்தும் தெரிந்தே நடந்திருக்கிறது என்று தானே எண்ணத் தோன்றுகிறது. பாதுகாப்பு அதிகாரிகள், நாம் இறப்போம் என்று தெரிந்தே பணியாற்றியிருக் கிறார்கள்.

ஏனெனில் அவர்கள் கடமை வீரர்களாக இருந்திருக்கிறார்கள். இம்மாதிரி யான தியாகிகள் இருப்பதாலேயே இந்தியா இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறது.

◆

**தொடரும்...**



## தமிழ்

அறம் பெருகும் தமிழ் படித்தால்!
அகத்தில் ஒளி பெருகும்!
திறம் பெருகும்! உரம் பெருகும்!
தீமைக் கெதிர் நிற்கும்!
மறம் பெருகும் ஆண்மை வரும்
மருள் விலகிப் போகும்!
புறம் பெயரும் பொய்மை எலாம்!
புதுமை பெரும் வாழ்வே!

**–பெருஞ்சித்திரனார்**

## தாழ்ப்பாள்

அன்றன்று
உணவே போதும்
என்ற காலத்தில்
காணக் கிடைக்காத
ஒன்று
ஆசையின் மிகுதியால்
மனிதன்
சேர்க்க ஆரம்பித்ததும்
அவசியமாகிப்
போனது.
பூட்டுக்குத் தாய்
என்று ஆனது.

**மெஞ்ஞானி**



சிவகங்கை மாவட்டம் வாரியன்வயன் என்ற ஊரைச் சேர்ந்த அலெக்ஸிஸ் பிரேம்குமார் என்ற கிறித்துவப் பாதிரியார் ஆப்கானிஸ்தானில் தீவிரவாதிகளால் கடத்தப்பட்டிருக்கிறார். அலெக்ஸிஸ் பிரேம்குமார் சேசு சபையின் குரு ஆவார். சேசு சபைக் குருக்கள், கல்விப் பணியையும், சமூகப்பணியையும் சிறப்பாகச் செய்பவர்கள். அலெக்ஸிஸ் பிரேம்குமார் கல்விப்பணியோடு போரினால் வெளியேற்றப் பட்ட அகதிகளுக்கு தொண்டாற்றியவர்.

இலங்கை அகதிகள் மறுவாழ்விற்காகவும், பழங்குடியினரின் மறுவாழ்விற்காகவும் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர். மூன்று ஆண்டுகளுக்கு முன் ஆப்கானிஸ்தான் சென்றார். அங்குள்ள ஹெராத் நகரில் ஏசுசபையின் அகதிகள் சேவை திட்டக் கல்வி அறக்கட்டளையின் இயக்குனராக இருந்து பணியாற்றி வருகிறார்.

கடந்த இரண்டாம் தேதி ஹெராத் நகர் அருகேயுள்ள கோகாதத் என்ற கிராமத்தில் போரினால் பாதிக்கப்பட்ட அகதிகளின் குழந்தைகளுக்காக நடத்தப்படும் பள்ளிக்கூடத் தைப் பார்வையிட பாதிரியார் அலெக்ஸிஸ் பிரேம்குமார் சென்றிருந்தபோது, ஆயுதங்களு டன் வந்த தலீபான் தீவிரவாதிகள் அவரைக் கடத்திச் சென்றுள்ளனர்.

அலெக்ஸிஸ் பிரேம்குமார் ஏன் கடத்தப் பட்டார்? காரணம் என்ன என்பதும் இதுவரை தெரியவில்லை. கடத்தி எங்கே வைக்கப்பட் டிருக்கிறார் என்ற தகவலும் இல்லை. கடத்தலுக்கு எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. இந்நிலையில் தனது மகனை மீட்டுத்தரும்படி மாவட்ட ஆட்சித்தலைவரிடம் அலெக்ஸிஸ் பிரேம்குமாரின் தந்தை மனு கொடுத்திருக்கிறார். கடந்த நான்காம் தேதி கிறிஸ்துவ நல்லெண்ண இயக்கத் தலைவர் திரு. இனிகோ இருதயராஜ் அவர்கள் தனது இயக்கத்தினருடன் தமிழக ஆளுநர் டாக்டர் ரோசையா அவர்களைச் சந்தித்து பாதிரியார் அலெக்ஸிஸ் பிரேம்குமார் அவர்களை மீட்க நடுவண் அரசை வலியுறுத்துமாறு மனு ஒன்றை அளித்திருக்கிறார்.

தமிழகத்தின் அரசியல் கட்சிகளின் தலைவர்களும் பாதிரியாரை மீட்க வேண்டும் என்று நடுவண் அரசிடம் வேண்டுகோள் வைத்திருக்கின்றனர். நடுவண் அரசும் மீட்பு வேலைகளில் ஆப்கன் அரசுடன் பேசி நடவடிக்கை எடுத்து வருவதாகச் சொல்லப்படுகிறது.

# ஆப்கானிஸ்தான் தீவிரவாதிகளால் கடத்தப்பட்ட தமிழ் பாதிரியார்





# கள்வன் மகன்

■ புலவர் கு. ஏழுமலை

தெருவில் மணல் வீடு கட்டி ஆடும் இளமைக் காலத்தில் உடன்ஆடி உள்ளத்தைக் கவர்ந்து கொண்ட ஒருவன், மணப்பருவம் எய்திய காலத் திலும் மறவாது, தன் மனைக்கு வந்து, பழைய அன்பு உரிமையால், தன் கையைப் பற்றிக் காட்டிய காதலைத் தானும் ஏற்றுக் கொண்டதை, ஒரு பெண், தன் தோழிக்குத் தெரிவித்தது இது:

*சுடர்த் தொடீஇ! கேளாய்: தெருவில் நாம் ஆடும்*

*மணற்சிற்றில் காலிற் சிதையா, அடைச்சிய*

*கோதை பிரிந்து, வரிப்பந்து கொண்டோடி,*

*நோதக்க செய்யும் சிறுபட்டி, மேலோர் நாள்,*

*அன்னையும் யானும் இருந்தோமா, இல்லீரே!*

*உண்ணுநீர் வேட்டேன் எனவந்தாற்கு அன்னை*

*அடர்பொன் சிகரத்தால் வாக்கிச் சுடர்இழாய்!*

*உண்ணுநீர் ஊட்டிவா என்றாள்: என யானும்,*

*தன்னை அறியாது சென்றேன்: மற்று, என்னை*

*வளைமுன்கை பற்றி நலியத் தெருமந்திட்டு,*

*அன்னாய்! இவன் ஒருவன் செய்தது காண்! என்றேனோ:*

*அன்னை அலறிப் படர்தரத் தன்னையான்*

*உண்ணுநீர் விக்கினான் என்றேனா அன்னையும்*

*தன்னைப் புறம்பழித்து நீவ மற்று என்னைக்*

*கடைக்கண்ணால் கொல்வான் போல் நோக்கி, நகைக்கூட்டம்*

*செய்தான் அக் கள்வன் மகன்.*

தோழி! நான்கூறும் இதைக் கேள், தெருவில் மணல்வீடு கட்டி ஆடும் அக்காலத்தில் வீட்டை காலால் அழித்தும், கூந்தலில் சூடியிருந்த மலர்களைப் பறித்துப் பாழாக்கியும் பந்தைக்



*கவர்ந்து ஓடியும் மனம் நோவத்தக்கனவற்றையே செய்யும் கொடியவனாகிய அச்சின்னவன், முன்னொரு நாள் அன்னையும் நானும் இருக்கும்போது எம் மனைக்கு வந்தான்.*

*வந்து, வீட்டோரே! நீர் வேட்கை உடையேன், உண்ணுநீர் தாருங்கள் எனக் கேட்டான். தாயோ, மகளே! பொன்னாலான கலத்தில் மொண்டு சென்று நீர் ஊட்டிவா எனப்பணித்தாள். நானும் அவன் இன்னான் என்பதை அறியாமலே தண்ணீர் கொண்டு சென்றேன்.*

*தோழி! அப்போது அவன் என்ன செய்து விட்டான் தெரியுமா? திடுமென வளையல் அணிந்த முன் கையைப் பிடித்து வருத்தத் தொடங்கிவிட்டான். எதிர்பாராதவாறு இவ்வாறு செய்துவிடவே, நடுங்கி, தாயே! இவன் செய்வதை வந்து பாரேன், எனக் கூவி விட்டேன். அன்னை அலறிப் புடைத்துக் கொண்டு ஓடி வந்தாள். அதற்குள் நான் சூழ்நிலையை உணர்ந்துகொண்டேன்.*

*அதனால் 'நீர் உண்ணும் போது விக்கினான்' என்று துணிந்து ஒரு பொய் சொல்லி வைத்தேன். அன்னை உடனே அவன் விக்கலைத் தீர்க்க அவன் முதுகை மெல்லத் தடவிக் கொடுத்தாள்.*

*தாய் அது செய்ய, அவள் அறியாதவாறு கடைக் கண்ணால் என்னைக் கொல்வதுபோல் பார்த்து, காதலுக்கு வழி செய்துவிட்டான். என்று தன் தோழிக்குக் கூறினாள் அத்தலைவி.*

◆

## தகவல்

முதல் பெண்கள் பள்ளிக் கூடம்
இந்தியாவிலேயே முதல் பெண்கள் பள்ளிக் கூடம்
தமிழ்நாட்டில் 1706 இல் தஞ்சை மாவட்டம்
"தரங்கம்பாடியில்" சீகன் பால்கு என்பவரால்
தொடங்கப்பட்டது.

*நன்றி : அன்புபாலம், மார்ச்சு 2014*

## அளவுகளைத் தெரிந்து கொள்வோம்

1 ஹெக்டேர் – 2.ஏக்கர் 47 சென்ட்
1 ஹெக்டேர் – 10,000 சதுர மீட்டர்
1 ஏக்கர் – 0,405 ஹெக்டேர்
1 ஏக்கர் – 4046.82 சதுர மீட்டர்
1 ஏக்கர் – 43,560 சதுர அடிகள்
1 ஏக்கர் – 100 சென்ட் (4842 சதுர கெஜம்)
1 சென்ட் – 435.6 சதுர அடிகள்
1 சென்ட் – 40.5 சதுர மீட்டர்
1 கிரவுண்ட் – 222.96 சதுரமிட்டர் (51/2 செனட்)
1 கிரவுண்ட் – 2400 சதுர அடிகள்
1 மீட்டர் – 3.281 அடி
1 குழி – 44 சென்ட்
1 மா – 100 குழி
1 காணி – 132 சென்ட் (3 குழி)
1 காணி – 1.32 ஏக்கர்
1 காணி – 57.499 சதுர அடிகள்
1 டிசிமல் – ஒன்றரை சென்ட்
1 அடி – 12 இஞ்ச் (30.48 செ.மீட்டர்)
1 கிலோ மீட்டர் – 1000 மீட்டர் (0.62 மைல்)
1.61 கிலோ மீட்டர் – 1மைல்
1 கிலோ மீட்டர் – 3280 அடிகள்
1 பர்லாங்கு – 660 அடிகள் (220 கெஜம்)
1 கிலோ மீட்டர் – 5 பர்லாங்குகள்
1 செயின் – 66 அடி (100 லிங்க்)
1 லிங்க் – 0.66அடி (7.92 அங்குலம்)
1 கெஜம் – 3அடி
8 பர்லாங்க் – 1மைல் (201.16 மீட்டர்)
1 ஏர்ஸ் – 1076 சதுரஅடி (2.47 சென்ட்)
22 கெஜம் – 1 செயின் (66 அடி
10 செயின் – 1 பர்லாங்க்
1 இஞ்ச் – 2.54 செ.மீ
1 செ.மீ – 0.3937 இஞ்ச்
1 கெஜம் – 0.9144 மீட்டர்
1 மீட்டர் – 1.093613 கெஜம் (3.28 அடி
1 சதுர மீட்டர் – 10.76391 சதுர அடி
1 சதுர அடி – 0.0929 சதுர மீட்டர்

**டேவிட் கிறிஸ்டோபர் ஆனந்த்**

# அறிவில்குறை ஆறறிவு மனிதர்

கள்ளிமலர் சூடுகின்ற மலரில்லை என்றே
காண்கின்ற மங்கையரோ பறிப்பதில்லை
உள்ளமிலார் பெரும்பொருளைச் சேர்த்திருந்தும் என்றும்
உவப்புடனே இல்லார்க்கு வழங்கலில்லை
பள்ளத்தில் தேங்குகின்ற மழைநீரோ பாரில்
பல்லுயிர்க்குப் பயன்படவே தவறுவதில்லை
உள்ளத்தில் உயர்ந்திடாதார் எந்நாளும் விரும்பி
உயர்வதற்கு மற்றவரை விடுவதில்லை.

ஐந்தறிவே பெற்றிட்ட விலங்கினங்கள் என்றும்
அகிலத்தில் தம்மினத்தை அழித்தலில்லை
இந்தமண்ணில் ஆறறிவைப் பெற்றிருந்தும் மனிதர்
இயன்றளவில் இனமழிக்கத் தவறுவதில்லை
தந்திரங்கள் செய்வதாலே உணர்வுபெற நரிகள்
தரணியிலே ஒருபோதும் தவறுவதில்லை
மந்தபுத்தி மனிதருமே தந்திரத்தால் பிறரின்
மதிப்புமிகு பொருட்கவரத் தவறுவதில்லை.

காகங்கள் இனத்துடனே உணவுகளைச் சேர்ந்தே
காலமெல்லாம் உண்கின்ற குணமுண்டு
தாகத்திற் கும்தண்ணீர் இனத்திற்கே வழங்கத்
தவிர்க்கின்ற பொல்லார்கள் மண்ணிலுண்டு
பாகனுடன் வரும்யானை மக்களிடம் விரும்பிப்
பழகுவதை நாமெல்லாம் காண்பதுண்டு
நாகத்தின் நஞ்சுபோல அடுத்தவரை வதைக்கும்
நயவஞ்சர் பல்லோர்கள் நாட்டிலுண்டே.

விலங்கினங்கள் வாரிசுகள் வாழ்வதற்காய் எதையும்
விரும்பியிங்கே சேர்க்கின்ற பழக்கமில்லை
பலகாலம் மனிதயினம் வாரிசுகள் வாழப்
பல்பொருளும் சேர்த்திடாமல் இருப்பதில்லை
அலைகடலோ குளிர்க்காற்றை உயிர்கட்கு வழங்க
அகிலத்தில் மாற்றேதும் கேட்பதில்லை
அலைகின்ற மனம்கொண்ட மனிதயினம் என்றும்
அடுத்தவர்கள் இன்பமுறத் தருவதில்லை.

**கவிஞர் இராம. பரஞ்சோதி**



# இறைவன்

இறைவனை வணங்க
ஏற்றம் இடம் எது
கேள்வி கேட்குமுன்னே
பதில்வரும் பலரிடமிருந்து
எங்கும் தொழலாம்
இறைவனை என்று.
இதுதான் உண்மையுங்கூட
நம்பிக்கையாளர்களுக்கு.

பிறகேன் கோவில்?
அது பிற மனிதர்களைப் பழக
சேர்ந்து தொழ
சேர்ந்து உண்ண
சேர்ந்து வாழ
செல்லலாம் ஆலயத்திற்கு
என்றாலும்
சில நாட்களில்
அனைவருமே ஆலயத்தில்
இருக்க வேண்டுமென
ஆவலாய்ச் சென்று
அவதிப்படுவது ஏன்?
கோவிலில் இருக்கிறான்
என்று நம்பும்
இறைவனைத்
தொழுவதை விட
என் செருப்பு என்னானதோ
இவன் இடிக்கிறானே
இவ்வளவு நெருக்கமாக
இருக்கிறதே
என்ற எண்ணங்களின்
குவியலாய் எப்படி
இறைவனைக் கும்பிட
மனம் ஒருமைப்படும்?
எங்கும் இருக்கிறான்
இறைவன்.

எல்லா நினைவும்
அகற்றி
அவனை
அகம் நிறுத்தி
தொழுவதே
துலங்கும் என்பதுதான்
நம்பிக்கையாளர்களுக்கு
அழகு.

**காட்டான்**



# இனம்

எவ்வளவுதான் மன்னிப்பது
எதுவரைதான் ஒதுங்குவது
எவ்வளவுதான் தாங்குவது
போதும் போதும்
மனிதகுலமே போதும்
நாட்களும்
நகர்ந்தோடி விட்டன.
எங்களை அழித்தீர்கள்
பொறுத்துக்கொண்டோம்
எங்களை அடிமைகளாய்
ஆக்கினீர்கள்
பொறுத்துக் கொண்டோம்
எங்கள் வாழ்விடங்களை
உங்களுடையதாக
ஆக்கினீர்கள்
இனி எங்களால்
முடியாது.
எங்கள் காட்டை
நாங்கள்
மீட்கப் புறப்பட்டுவிட்டோம்
புறப்பட்ட இடத்தில்
எங்கள் வாழ்விடத்தில்
நடந்த விபத்தை
வேடிக்கை பார்க்கிறாய்
உயிரிழப்பு உனக்கு
வேடிக்கையா?
உன் பிணத்தையும்
வேடிக்கை பார்க்கட்டும்
உன் இனம்!

**வைரி**

*(6/1/2014 அன்று செய்தித்தாளில், இறந்து கிடந்த குட்டியானையை வேடிக்கை பார்த்த ஒருவரை தாய் யானை கொன்றது. செய்தி.)*





# குடியரசுத்தலைவர் உரையிலிருந்து

அனைவருடன் இணைந்து அனைவரின் மேம்பாடு என்ற தாரக மந்திரத்துடன் குறைந்த அளவில் அமைந்த அரசாங்கம் நிறைந்த அளவிலான ஆட்சி என்று அனைத்து நடவடிக்கைகளிலும் இந்த அரசாங்கம் சிறந்து விளங்கும்.

இந்த அரசாங்கம் ஏழைகளுக்காக தன்னை அர்ப்பணித்திருக்கிறது. வறுமை என்னும் மிகப்பெரும் சாபத்தை ஒழிப்பது நமக்கு முன்நிற்கும் மிகப்பெரும் சவாலாகும். வறுமையை முற்றாக ஒழிப்பதற்கு அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.

உணவு பற்றாக்குறையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதை இந்த அரசாங்கம் முக்கியமான கடமையாக கருதுகிறது. கள்ளச் சந்தை, பதுக்கல் போன்றவை முற்றாக ஒழிக்கப்படும். பொது விநியோகத் திட்டம் சீர்படுத்தப்படும். இவற்றுக்கான திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன.

திறமை மேம்பாட்டு நிறுவனங்களும் அமைக்கப்படும். பள்ளி ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் பயனளிக்கும் வகையில் தேசிய மின்னணு நூலகம் ஏற்படுத்தப்படும். நாட்டில் விளையாட்டுத் துறைக்கு முன்னுரிமை அளித்து இளைஞர்கள் மற்றும் பள்ளி குழந்தைகளின் திறமைகள் ஊக்குவிக்கப்படும்.

புதிய மருத்துவ கொள்கை வகுக்கப்பட்டு யோகா மற்றும் ஆயுர்வேத சிகிச்சை முறைகள் வழியாக தேசிய சுகாதார உறுதிப்பாட்டு திட்டங்கள் வகுக்கப்படும். மருத்துவக் கல்வி மற்றும் பயிற்சி முறைகள் ஊக்குவிக்கப்படும். அகில இந்திய மருத்துவக் கழகங்கள் ஒவ்வொரு மாநிலத்திலும் அமைக்கப்படும்.

மகாத்மா காந்தியின் 150வது பிறந்த நாளை கொண்டாடும் வகையில் சுகாதாரமான இந்தியா என்னும் திட்டம் அறிமுகப்படுத்தப்படும். இதன் மூலம் பல்வேறு சுத்தம் மற்றும் சுகாதார பணிகள் அமல்படுத்தப்படும்.

பெண்களுக்கு எதிராக தற்போது நடைபெற்று வரும் பயங்கரமான சம்பவங்கள் கவலையளிக்கிறது. இத்தகைய விவகாரங்களில் எந்த வித சகிப்புத் தன்மையும் கூடாது என்பதே அரசின் கொள்கையாகும். எனவே இத்தகைய குற்றங்களுக்கு எதிரான சட்டங்கள் அனைத்தும் கடுமையாக்கப்படும். பெண் குழந்தைகளின் பாதுகாப்பு மற்றும் பெண் குழந்தைகளுக்கு கல்வி என்பதே இந்த அரசின் தாரக மந்திரம் ஆகும். இது தொடர்பாக நாடு முழுவதும் மிகப்பெரிய விழிப்புணர்வுப் பிரச்சாரம் மேற்கொள்ளப்படும்.

தேசிய பிரச்சினைகளில் மத்திய மாநில அரசுகள் இணைந்து செயல்பட வசதியாக தேசிய வளர்ச்சிக்குழு மற்றும் மாநிலங்களுக்கு இடையேயான குழுக்களுக்கு புத்துயிர் அளிக்கப்படும். அந்த வகையில் மத்திய அரசும், மாநில அரசுகளும் ஒரு குழுவாக இணைந்து செயல்பட வேண்டும்.

ரெயில்வேயை நவீனப்படுத்தலின் ஒரு அங்கமாக, அதிவேக ரெயில்களுக்காக வைர நாற்கர

திட்டம் உருவாக்கப்படும். சிறிய நகரங்களையும் வான்வழி மார்க்கமாக இணைப்பதற்காக சிறிய விமான நிலையங்கள் அனைத்தும் மேம்படுத்தப் படும். தேசிய நெடுஞ்சாலைகளை சீரமைப்பதற்காக காலவரையறையுடன் கூடிய, வேகமான, நன்கு, கண்காணிப்புக்கு உட்பட்ட செயல் திட்டம் தொடங்கப்படும்.

வெளிநாடுகளில் பதுக்கியுள்ள இந்தியர்களின் கறுப்பு பணத்தை மீட்டுக்கொண்டு வர, மோடி தலைமையிலான அரசு அந்தந்த நாடுகளுடன் ஒப்பந்தங்களை ஏற்படுத்தும்.

கறுப்பு பண மீட்பு விவகாரத்தில் முதல் நடவடிக்கையாக சிறப்பு புலனாய்வுக்குழு ஒன்று அமைக்கப்பட்டு உள்ளது. கறுப்பு பணத்தை மீட்கும் நடவடிக்கையில் வெளி நாட்டு அரசுகளுடன் இணைந்து இந்த குழு தீவிரமாக செயல்படும்.

அனைத்து மட்டங்களிலும் ஊழலை ஒழிக்கும் வகையில் லோக்பால் சட்டம் வலுப்படுத்தப்படும். அரசாங்க ஆவணங்கள் அனைத்தும் டிஜிட்டல் முறையில் பாதுகாக்கப்படும். அரசாங்கத்துறைகள் மேலும் திறம்பட செயல்படும் வகையில் திட்டங்கள் வகுக்கப்படும்.

கணினி வழியாக அரசு அலுவலகப் பணிகள் விரைவுபடுத்தப்படும். அரசாங்கத் துறைகள் மற்றும் அமைச்சகங்கள் சமூக ஊடகங்கள் வழியாக மக்களுடன் தொடர்பு கொள்ள ஏற்பாடுகள் செய்யப்படும். சரக்கு மற்றும் சேவை வரி (ஜி.எஸ்.டி) எனப்படும் நேரடி வரி வசூலிப்பு முறையை அமல்படுத்தும் முன் மாநிலங்களின் கோரிக்கைகள் பரிசீலிக்கப்படும்.

உயரும் பணவீக்கத்தை கட்டுப்படுத்த முக்கியத்துவம் கொடுக்கப்படும். பதுக்கல் மற்றும் கள்ளச்சந்தையை ஒழிக்க தீவிர முயற்சி செய்யப்படும்.

நீதிமன்றங்களில் தேங்கிக்கிடக்கும் வழக்குகளை விரைந்து முடிக்கும் வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

நீதித்துறையில் உள்ள காலிப்பணி யிடங்களை நிரப்புவதன் வழியாக பணிகளையும் விரைந்து முடிக்க திட்டங்கள் வகுக்கப்படும். மாநில அரசுகளுடன் கலந்து பேசி வகுப்புவாத கலவரம் மற்றும் இடதுசாரி தீவிரவாதம் ஆகியவற்றை ஒழிக்க தேசிய அளவில் திட்டம் ஒன்று தொடங்கப்படும்.

இந்திய பொருளாதாரத்தை சீர்படுத்தும் வகையில் பல நவீனமான திட்டங்கள் அறிமுகப் படுத்தப்படும். முதலீடுகள் ஊக்குவிக்கப்படும், சில துறைகளில் அன்னிய நேரடி முதலீடுகள் வழியாக வேலை வாய்ப்பு அதிகரிக்க வழிவகை செய்யப்படும்.

வேலை வாய்ப்பு அதிகரிக்கப்படும். வேலை வாய்ப்பு நிறுவனங்கள் வேலை வாய்ப்புகளை உருவாக்கும் நிறுவனங்களாக மாற்றப்படும். உள்ளூர் தொழில் நிறுவனங்கள் ஊக்குவிக்கப் படும். இந்த நிறுவனங்கள் பன்னாட்டு நிறுவனங்களுடன் இணைந்து உலகத்தரத்தில் உற்பத்தியைப் பெருக்க வழிவகை செய்யப்படும்.

சிறு,குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். நெசவாளர்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்துவதற்கு னைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும். ரெயில் போக்குவரத்து நவீனப்படுத்தப்படும். நெடுஞ்சாலை கள் மேம்படுத்துப்படும்.

சிறு அளவிலான விமான நிலையங்கள், துறைமுகங்கள் வளர்ச்சி என்று திட்டங்கள் வகுக்கப்படும்.

தேசிய அளவிலான மின்சார கொள்கை வகுக்கப்படும். மக்களின் பயன்பாட்டுக்கு ஏற்ற வகையில் மின்னணு திட்டங்கள் செயல்படுத்தப் படும்.

நகர்ப்புற விரிவாக்க திட்டத்தின் கீழ் 100 புதிய நகரங்கள் உருவாக்கப்படும். இந்த நாடு 75வது சுதந்திர ஆண்டை கொண்டாடும் வேளையில் ஒவ்வொரு குடும்பத்துக்கும் தண்ணீர் இணைப்பு, கழிப்பறை வசதி மற்றும் 24 மணி நேரமும் தடையற்ற மின்வசதியுடன் நிரந்தரமான வீடுகள் அமைத்து தரப்படும்.

இயற்கை வளங்களான நிலக்கரி, கனிமங்கள் மற்றும் ஸ்பெக்ட்ரம் ஆகியவற்றை சீரான முறையில் விநியோகிக்கும் வகையில் செயல்திட்டம் ஏற்படுத்தப்படும். ◆



Owned, Published and Printed by **V. Thalapathi,** Published from No. 13/5, Buddha Street, Rangarajapuram, Kodambakkam, Chennai - 24. and Printed at **DESIGNS PARK,** No. 22 weavers street triplicane, chennai-5, Editor: **V. THALAPATHI.**



மணமக்கள்

T.A. **கிறிஸ்டோபர்** பி.ஏ.,

R.**மேரி சுசன்னாள்** எம்.ஏ.பி.எட்.,

நாள் : 13.6.2014

மாலை 5 மணி







இருமனம் இணையும் திருமண விழா!
மணமக்கள் என்றென்றும்

நல்லறம் பெற வாழ்த்துகிறோம்!

## வாழ்த்துகளுடன்

**எலிசபெத் தாமஸ்**
டாக்டர் T.A. **அற்புதராஜ்**
திரு. **பவுல் ராணி அற்புதராஜ்**
திரு / திருமதி **மகிமைராஜ் ஜான்சிராணி**
திரு T. **ஜார்ஜ் பெர்ணான்டஸ்**
T. **ஜாக்குலின் மேரி**
M.J.**சுஷ்மிதா எலிசபெத்**
M.J. **மெர்லின் எலிசபெத்**
மாஸ்டர் A. **ஸ்டீபன் ராஜ்**

MUTRAM - Tamil & English Monhtly R.Dis No. 1678-2012
RNI No. TNBIL/2010/36924

வளரும் படைப்பாளர்களுக்கு...!

# விசவனூர் வே.தளபதி எழுதிய
# சிறுகதைகள்

